[illegible]
[illegible]


T.D.R. C 333

RR No 27-2-79.

O,892MVP5,D
M79
116698

உ

கடவுள் துணை.

# தேசிங்குராஜன் நாடகம்.

திருவண்ணாமலை

வீரபத்திரஐயரவர்கள்

இயற்றியது.

இஃது,

திருவெண்காடு

ஆறுமுகசுவாமிகளால்

பார்வையிடப்பட்டு,

திருவொற்றியூர்

இருசப்பமுதலியார் குமாரர்

பூசாராமமுதலியாரது

பரப்பிரமமுத்திராக்ஷரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

வெகுதானிய௵

27
2-19
3339

# புத்தகவிளம்பரம்.

இதனால் சகலமானபேர்களுக்கும் தெரிவிப்பது யாதெனில், சென்னையைச்சார்ந்த இருங்குன்றத்து இலட்சுமிநாராயணபுரத்தில் தொட்டிக்கலை குமரப்பமுதலியார் வீதியில் நெ-யது. விலாசமுள்ள கிருகத்தில் ஸ்தாபித்திருக்கின்ற பரப்பிரம முத்திராக்ஷரசாலையில், இதனடியில் கண்டிருக்கப்பட்ட புஸ்தகங்களெல்லாம் கற்றுணர்ந்த பெரியோர்களால் பிழையறப்பரிசோதித்து அச்சிடப்பட்டிருக்கின்றன. இதுமேலாகிய உபயோகமுள்ள பலவித வேதாந்த சித்தாந்த கிரந்தங்களும், வயித்தியகிரந்தங்களும், ஜோசியகிரந்தங்களும், மகாசமார்க்ககிரந்தங்களும், இன்னும் அனேகவிதமான தமிழ்ப்புத்தகங்களும் விலைசலவாய் விற்கப்படுமாகையால், வேண்டியவர்கள் மேற்படி அச்சுக்கூடத் தலைவராகிய ம-௱-௱-ஸ்ரீ பரசுராமமுதலியாரவர்களிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்ரீமகாபாரதக்கீர்த்தனை காலிகோ பவுண்டுடன் விலை ரூபாய் ௨
ஸ்ரீமத்கம்பராமாயணவசனம்
பார்க்கவபுராணமென்னும் விநாயகபுராணவசனம்
ஞானவாசிட்டம் மூலமும்-உரையும்
பிரமோத்தரகாண்டம் மூலமும்-உரையும்
விஷ்ணுபுராணவசனம்
ஆத்மரட்சாமிர்தமென்னும் வயித்தியசாரசங்கிரகம்
அகஸ்தியர் வமதத்துவமென்னும் பஞ்சகாவியநிகண்டு
தெக்ஷிணாமூர்த்தி திருமந்திரம்
ஷை யார் ஜாலத்திரட்டு
தன்வந்திரி வயித்திய சிந்தாமணி
ஷை யார் கல்பஞானம்
சிமிட்டுரத்தினச்சுருக்கம்
இராமதேவர் வயித்தியகாவியம்
அகஸ்தியர் ஆயுள்வேதம்
ஷை யார் பலவாகடம்
இந்திரமாலை
விராடபஞ்சபக்ஷி
பராசரியம்
ஜாதகசிந்தாமணி
வீமேசுரஉள்ளமுடையான்
சூடாமணிஉள்ளமுடையான்
ஜந்துபடைப்போர்
அப்பாசநாடகம்
பலவித்துவான்கள்பதம்
சீராபுராணம்

உ

கணபதிதுணை.

# தேசிங்குராஜன் நாடகம்.

விநாயகர்தோத்திரம்.

சீர்புகழ்தகத்துச்செஞ்சி சிறப்புள்ளநகரில்வாழும்
பார்புகழ்தேசிங்குராசன் பதறியேபாப்புபேரில்
தார்புகழ்யுத்தஞ்செய்த சரித்திரவாலாற்சொல்ல
கார்முகில்மேனியானைக் கணபதிகாப்புத்தானே

தேசிங்குராசன்சரித்திரவாலாறு.

அகவற்பா.

— ௧ —

பார்புகழ்டில்லிப் பதிதனையாண்டு
பாதஷாவானவர் பாருடனரசு
சீர்பெறச்செங்கோல் செலுத்துமக்காலில்
வடதிசைதன்னில் மகாமேருசாரலில
கோக்குபக்கிரியாள் குணமுள்ள அலுக்கன்
காதலனிவனுக்கு நற்றவஞ்செய்த
தெய்வலோகத்துத் தேசியெனும்பரி
வருவதைக்கண்டு வணங்கியே அலுக்கன்
தந்திரமந்திரத்தால் தானதைக்கட்டிப்
பெருஷராசிக்குப் பரிவுடன்கொடுக்கப்
டில்லிதேசந்தனைச் சேரவருகையில்
அதட்டியேயவன் மனுநாவிதனைப்
பாதஷாவுடனே படைமன்னர்கேட்டு
மனதுகலங்கி மன்னனின்மேல்வீழ்ந்து
மன்னவனெழுந்து மந்திரியைநோக்கி
இதுவென்னவதிசய மியம்பெனவுரைக்க
அவ்வமயந்தனை யறிந்தவன்சொல்லப்
பாதஷாகேட்டுப் பரிவுடனப்போ
வர்களோடுநீ யியம்புமென்றுரைக்கச்

செஞ்சியையாளுந் தோரணிராசன்
தரணிசிங்குந் தானிரண்டுபேரும்
வரிச்சவாரி பிட்சணஞ்செய்யவர்
எங்களால்முடியாதென்றுரைத்தார்கள்
அந்தசொற்கேட்டு வன்புடன்பாதுஷா
அவர்களையழைத்துத் துரிதமாயோடி
தோரணிராசன் தரணிசிங்குவை
யழைப்பித்தென்ன வவ்வுரைகேட்டுக்
காற்றுப்பறந்து கடுகெனவருகையில்
நாவலைப்புகழும் நவாப்புதனக்கு
எழுபத்திரண்டு விதத்தமகாரமு
அதிலேயுள்ளடக்க மழகானசெஞ்சியில்
தோரணிராசன் தன் தேசத்தையாண்டு
இருடனாக செலுத்துமக்களின்
சகோதரனான தரணிசிங்குக்குப்
பிள்ளையில்லாமல் பெருந்தவஞ்செய்யப்
பரமன்கிருபையால் பட்டாபிராணி
கருப்பந்தரிக் களிப்புடனிருக்கையில்
ஆதர்க்கன்பத்து துரிதமாயுரைக்க
கலைதெனாது சலமுடனிருக்கும்
பாதுஷாவைக்காணப் பரிவுடனக்க
சமயதிசொல்லச் சலுதியிலங்குவந்தா
ஆலவாய்முகண்டு வனுமானிக்க
கண்டுபயந்திக் கதிர்வவீழ்ந்தார்
டில்லிராஜனுந் திகைத்துமேபார்த்து
ஏழுவருஷந்திசைபதி யிருந்துபோவிசொன
அவ்வருஞ்சமயந்தி திருமணிவிருந்தார்
செஞ்சியில்பட்டாபிராணியம்மாளும்
சிம்பலக்கினத்தில் தேசிங்கைப்பெறவும்
பள்ளிக்கூடத்தில் பாங்குடனவைக்க
மேவுந்துக்காரனும் முதன்மையாய்க்கூட
ஆயுதப்பிட்சைக ளன்புடன்கற்றபின்
தாயிடம்வந்து தந்தையெங்கேயென
டில்லிதேசத்தில் தேசிவெனும்பரி
வாத்தாய்தன்மேல வரிசையாயச்சவாரி
செய்யமாட்டாமல் சிறையிலிருக்கிறார்
என்றவளுரைக்க விருகண்சிவந்து
நாங்கேபோயந்த நற்பரிதன்னைச
சவாரிசெய்து தந்தையிருவரை
மீட்டுவருவேன் மீளாதேயென்று
தேசிங்குபாலன் சிறப்புடனெழுந்து
மோவுந்துக்காரன் முதன்மையாயழைத்து



டில்லிதேசத்தைச் சேரவேவந்து
பாராசாலையைப் பாங்குடன்பார்த்து
ஏரிச்சவாரி யின்பமாய்ச்செய்தபின்
டில்லிராஜனுஞ் சோத்சமுமி
வெகுமதிசெய்து விடையதுகொடுக்கச்
செஞ்சியில்வந்து சிறப்புடனிருந்து
கலியாணம்ராணியைக் களிப்பெறச்செய்து
பாரினிற்புகழப் பாங்குடனிருக்கையில்
வழுவயதி வினியமாய்வளர்த்த
தாயுந்தந்தையுந் தான்சென்றுபோக
சிறப்பனுஞ் தோரணிராஜன்
பாலன்தேசிங்குக்குப் பலருமறியப்
பனிரண்டுவயதில் பட்டமுங்கட்டிப்
பட்டாபிஷேகமாய்ப் பாங்குடனிருக்கையில்
இட்டமாய்க்கபப்பு செஞ்சியில்தாவு
வாகேதுவென்று வரியதான்விதிக்க
வரியதான்தன்னை வள்ளல்தேசிங்கு
சரியாய்ச்செஞ்சியில் தான்வசூல்தன்னை
சொல்லுவாரெனவுந் தோன்றமல்லனும்
பனிரண்டுவருஷப் பணத்துக்குவந்தேன்
அந்தசொற்கேட்டு வாசனும்வெகுண்டு
இன்னமொருகாரியமென்றுரைக்கத்
தோன்றமல்லனுந் திகைத்தவனிரண்டு
நாளுமேசெய்த நற்பிலுமல்ல
நபாப்புவனுப்ப நலமுடன்வந்தேன்
என்றனையென்றறிய இருக்கிறதந்த
காரணமுதலின நலமுடன்கண்டு
திருட்டன்விட்டேன் சீக்கிரமாயோடி
உத்தனையாள்வோ ரலுத்தாப்பாவை
வந்தாள்வையில் வாளிபணத்தைக்
தந்திட்டமுழுதுந் தான்கொண்டுபோக
வந்தருளென்று வருந்திச்சொல்லாயென
சிக்கையுந்தெளித்து சீக்கிரமாயோட
மடந்தவிர்த்தாந்தம நபாப்புக்குரைக்க
அந்தச்சொற்கேட்டு வதிகோபமாகி
இவ்விதமானைய மியலுடன்கூட்டி

சரித்திர வரலாறு.

ஆர்க்காடுவிட்டு வந்திருந்துமேட்டுது
தேவனூர்பேட்டையைத் தீவிரமாய்க்கச்
செஞ்சிசேனைகளும் சீக்கிரம்வந்து
தேசிங்குராசனைத்தேடியேமுறையிட
ஒன்றுக்குமொன்பது வுங்களுக்களிப்பேன்
என்றசொற்கேட்டு வந்திறங்குங்கள்
மாயவன்பூசை மன்னவன்செய்கையில்
தேசிங்குராஜனுக்கு சீக்கிரம்வந்து
இராக்கர்கோயிலில் நலமாய்த்துயிக்கும்
வந்தாரென்றசொல வருந்தியேகேட்டுத்
தங்களுக்குள்ள தளமெல்லாங்கூட்டி
மந்திரிமாவுத்துக்காரன்மன்னனுங்கூடி
மூன்றுகுதிரையும் மூர்க்கமதாயவர
கனகோபப்புக் கலக்கியேபார்த்துத்
தாழனசேரியைத் தானுமேயடைந்தார்
வாராதோராற்றை வன்னத்தேசிங்கு
நீலப்பரியுடனேதிரைக்கரையில்
ஐந்துகுதிரையை யாறுகொண்டுபோக
மீந்தகுதிரைகள் வெகுண்டுகொக்கரித்து
போகிபோடென்றுபுரவியைவிட்டுக்
கும்பலாய்த்தளத்தைக் குவித்தவர்துணிந்து
வெற்றியுங்கண்டு வெகுபினராஜன்
உளவுசாடனையா லுபக்கசஞ்சாரி
தெரியாமல்பட்டமெனத் தீரன்மேல்பாயக்
கரியமால்வந்து காக்ஷிபுகொடுத்தார்
இந்தநற்கதையை யிசைக்கநாடகமாய
அயனரியறியா வண்ணனால்மெய்யுடைய
நகரினில்வாழும் பாலவீரபத்ரன்
தொல்புவியதனில் தோன்றிச்செய்தனனே
புல்லறிவினனான புகன்றவிக்கதையில்
சொற்குற்றங்கள் சோர்வுமிகவிருந்தால்
கற்றவர்பெரியோர் கோப்பதுகடனே.

சரித்திர வரலாறு

முற்றிற்று.



கணபதிதுணை.

# தேசிங்குராஜன் நாடகம்.

விநாயகர்-தோத்திரம்.

வெண்பா.

சீர்புகழுஞ்செஞ்சிநகர் தேசிங்குகன்கதையை
பார்புகழநாடகமாய்ப் பாடுதற்கு-வார்மிகுந்த
கர்த்தாவர்தானின்ற கந்தருக்குமூத்த
கற்பகவிநாயகன்றான் காப்பு.

சுப்பிரமணியர்-தோத்திரம்.

வெள்ளியங்கிரிமிசை விளங்குமெய்ப்பொருள்
கள்ளவிழ்குழலுமை களிக்கும்பாலகனு
ரெள்ளரும்பரிவுட னீன்றசேயெனும்
வள்ளிபங்காளனை வணங்கிவாழ்த்துவாம்.

சிவன்-அயன்-அரி-தோத்திரம்.

பனிமதிச்சடையில்வைத்த பரமனைவாணிதன்னை
கனிவுடனாவில்வைத்த கடவுளைத்தனமாதை
மணியுடனணிந்தவிஷ்ணு விளர்மலையிடைவிடாமல்
மனதினில்மதித்துயானும் மலரடிவணங்கினேனே.

அவையடக்கம்.

பேர்பெருகும்முத்தமிழ்நா லாய்ந்தோர்முன்னே
பிரபலமுள்ளதேசிங்குக்கதையையன்பாற்
சீர்பெறவேநாடகமாய்ப் பாடலுற்ற
திறமின்மைக்கவரதகனைத் தெளிந்துபார்க்கின்
போர்பெரியகடல்தனை புண்டுமேமேகம்
பிறக்குபுவிமேற்பொழிந்து வெள்ளமாக்கு
மேருவுயக்கடலைநிறைவிப்பேனென்ன
இசைத்தமிழ்விக்கதையை யியம்புவேனே.

இதுவுமது.

பஞ்சலட்சணங்களாய்ந்து பாரினிற்புகழும்வாணர்
விஞ்சியபுராணகாவியம் வீறுடனறிந்தோர்செல்லாம்
அஞ்சிநான்பயந்துபோற்றி யாதிநான்கதையைப்பாட
பஞ்சையாமெந்தன்மீதில் பட்சம்வைத்தருளுவீரே.

விநாயகர்வருகிறபொரு-திபதை.

மருவளர்கமிக்கை தும்பை மலர்கொறத்திலகுவேணிப்
புரிசடையாரீன்ற புனிதனைக்கரமுகீண்ட
பருவரைமீதில்லோங்கும் பாரதமெழுதுங்கோடும்
விரிவொளிதிகழச்செல்வ விநாயகர்தாம்வந்தாரே.

விநாயகர்வருகிற-தரு-இ-ம-சாவேரி-தாளம்-ஆதி.

பல்லவி.

செல்வவிநாயகர்வந்தார் மிக
செல்வவிநாயகர்வந்தார்

அநுபல்லவி.

செல்வவிநாயகர்வந்தார் வல்லமையிடத்திற்சென்று
வல்லமைபொருந்துமராஜன்சொல்லுமகதைக்குமுன்பாய் (செ

சரணங்கள்.

காசிற்சதங்கைசத்தம் கலீர்கலீரென்ன
கையிலங்குசபாசங்கொகவென்ன
ஆவித்துக்கூத்தாடி ஆகுவாகனமேறி
அண்டர்கள்முனிவர்க ளிரண்டுபக்கம்பிடி (செ

தொந்திவயிறுகுலுங்கவே முப்புரிநூலுந்
துவண்டுமார்பிற்புரளவே
ஐந்துகரமுமேந்தி யானைமுகத்தோன்தந்தி
கந்தருக்குமூத்தோன் கனராஜசபையைநாடி (செ

கட்டியக்காரன்வருகிற-பொரு-திபதை.

சிற்சிவிறபாகைபூண்டு சிறந்தமீசையைமுறுக்கி
யணிவிற்றட்டிதன்னை யழகுடனிறுக்கக்கட்டி
தாணிலையாளுமந்தத் தார்வேந்தன்பாதுஷாவின்
ஆணமீனவாசற்காக்கு மதிபன்கட்டியன்வந்தானே.

கட்டியக்காரன்வருகிறதரு-இ-ம-சங்கராபரணம்-தாளம்-திரிபுடை

பல்லவி.

கட்டியக்காரனும்வந்தான் பாதுஷாவாசற்
கட்டியக்காரனும்வந்தான்

அநுபல்லவி.

கட்டியக்காரனும்வந்தான் பட்டுவண்ணப்பாகைகட்டி
சட்டமாய்ச்சபையினுள்ளோரிடமதாய்ப்பார்த்திருக்க



சரணங்கள்.

கையிற்கேடயங்கத்தி கலகலவென்றுவீச
காதிற்கடுக்கனது பளபளவென்றொளிர்தர
மெய்யிற்றனிப்பதக்கம் மினுமினென்றசைந்தாட
வீரகண்டாமணியும் காலிலசைந்தாட
வையகந்தோர்களும் ஜெயமதாகவே
மெய்யேதுதித்திடும்-பாதுஷாவாசற் (கட்டி

கட்டியன்சொல்-திபதை.

மந்திரயாகவேமய வரிசைமன்னர்கண்மறையும்
இந்திரர்முதலோர்போற்று மிசைபெறுமலத்தையாளும்
சுந்தரடில்லிபாதுஷா அதிகருவோலுவிருக்க
மந்திரிமார்கள்சூழ மகிழ்வுடன்வருகின்றானே

வசனம்.

அகோதெப்படியென்றால் இம்மதக்காதுதேசத்தையாளும் இரா
மார்த்தாண்ட இராசகெம்பீராகிய டில்லிபாதுஷாவானவர் மந்திரிகள்
சூழ்படியாக இந்தமகாசபைக்கு வருகிறதைக் காண்க

பாதுஷாவருகிற-தரு-இ-ம-நவரோஜ்-அட-தாளம்.

பல்லவி.

எகமாயுலகில்கீர்த்தியாகியதக்கத்துடில்லி
போகமாய்ச்சபையிலராஜன்புகழ்பெறவந்தான்

சரணங்கள்.

ஆயிரமந்திரிமார்கள் பாய்புடைசூழவே
பாயிரப்படைமன்னர்கள் பக்கத்திலேவரவே
வயிராக்கியமுள்ளோராசர் வந்தடிபணிய
வைசெயசிம்மாசனத்தில் தாவியேபுலவையாள

கன்னியர்இருபுறமுங்கவரிவீசவரவே
உன்னிதவெண்குடையுமபோட்டு வயர்ந்தநிராகுசித்தி
வன்னமுடிதரித்து மார்பில்பதக்கமணிந்து
மன்னியபுஜகீர்த்தியும் வயிரவாள்கையிற்கொண்டு

சண்டப்பிரசண்டனை சமர்த்தன்டில்லிராசன்
மண்டலத்திலுள்ளபேர்க்கு வேண்டுகைப்புயியாயிவன்
கண்டவர்சலாஞ்செய்யும் கனிதமதிவதனன்
தொண்டிலகானவேயென்று தோன்றினனேசபையில்

பாதுஷாசொல்-திபதை.

மாதமும்மாரிபெய்து மாநிலந்தழைத்துவாழ்க
காதலாயெனதுமந்திரி கனிவுடனமிகவும்வாழ்க

யாதவர்குடிகள்மற்ற யாவருந்தழைத்துவாழ
கோதிலாயெனது செங்கோல் குறையின்றிவாழ்ந்தானே

முதல்மந்திரி-திபதை.

தீரர்கள்தீராபோற்றி செயமுட னுலகையாளும்
வீரர்கள்வீராபோற்றி மேதினிக்கரசேபோற்றி
சூரகெம்பீரநீதி துறையெலாந்தெரிந்தகோவே
தாரணியுயனேடில்லித் தலைவனேபோற்றிபோற்றி

இரண்டாவதுமந்திரி-திபதை.

நால்வகைபிரதமேறி நடத்திவேபகைவர்தம்மை
தோல்வியையடையச்செய்தே தொல்புவியாள்வாய்போற்றி
நால்வகைதருமநீதி நடப்பனவறிந்தாய்போற்றி
வெள்ளிரிவில்லம்பேந்தும் விறல்டில்லிமன்னாபோற்றி

கட்டியக்காரன்-திபதை

ஷ்டநிக்கிரகசிஷ்டபரிபாலன குமாரர்த்தாண்டாபோற்றி
ஷிரகண்டர்களைகண்டிக்குமதீர நிர்ப்பயவேந்தாபோற்றி
ஷ்டதிக்குள்ளோர்கள்வாழ்த்திடயேபோற்றிடு மதிவீரசூராபோற்றி
ஷ்டமுடனேடில்லிதனையாள்மதியூகி விளியமாமன்னாபோற்றி

பொது-திபதை.

வடதிசையனேகஞானம் மகமேருசாரலன்னாட்
திடமுடன்ரிஷிகள்தங்கள் தீவினையகற்றுதற்கு
நிதநினைக்காணவேண்டி நின்றுமேதபங்கள்செய்ய
பதஞ்ஞாருக்கின்வந்து பரிவுடன்றபத்தைச்செய்தார்

பொது-வசனம்.

அதோதெப்படியென்றால் கோகுபக்கிரியானவன்பாராசாரிஸ்ப
ந்திக்கொண்டு டில்லிக்கருகாமையில் வருகிறபோது பாராசாரியர்
களேனக்க அந்தசப்தங்கேட்டுப் பாதஷாமுதலாகிய சகலமன்னர்க
மூர்ச்சையாய் விழுந்து யெழுந்திருந்து பாதஷாவானவர்மந்திரியைப்
பார்த்துசொல்லுகிற விதங்காண்க.

பாதஷா-திபதை.

மந்திரிராஜசிங்கா மன்னவாவென்னமாயம்
அந்தரமிடிக்கதோடா வதிசயமறிகிலென்யான்
தந்திரமாகப்பார்த்துத் தாழ்வினையுண்டோகண்டு
வந்துநீசொன்னையானால் மனமதுநிலைக்குந்தானே

வசனம்.

வாராயப்பாமந்திரி இதுவென்னவதிசயம் ஆ.ஆ அண்டங்களிடிந்த
அல்லது பாதாளம் வெடிந்ததோவனகங்கொன்றுதோன்றவில்லை



மனக்கலக்கமாயிருக்கிறதாகையால் நீயதிசிக்கிரத்தில் இன்னதென்று
பார்த்துததெரியச்சொல்லவேணுமந்திரி.

பொது-திபதை.

என்றுபாதஷாவுஞ்சொல்ல வெழுந்துமேராஜசிங்கன்
சென்றவன்பார்க்கும்போது திசைத்தொருமின்னல்கண்டு
அன்னடையிலோடிவந்து யாரெனக்கேட்கும்போது
கொண்டுவந்திட்டசேதி குறிப்பதையுணர்செய்வானே

கோகுபக்கிரி-திபதை.

இத்திசைக்குநிரையல்ல விமையலோகத்தில்வாழும்
அந்தணர்கூட்டத்தாலே யடியனுன்வருந்தப்பட்டு
எத்திசைபுகழும்டில்லிக் கிறைவனுக்களிப்போமென்று
நத்திநான்கொண்டுவந்தேன் நாதனேசலாஞ்செய்வேனே

வசனம்.

கேளுமையாமந்திரி இதுதெய்வலோகத்துக்குநிரை [illegible] நா
ன் அதிகவருத்தப்பட்டுப்பிடித்துப் பாதஷாவுக்குக் கொடுத்து எனது
வறுமையைத்தீர்த்துக்கொள்ளலாமென்றுகொண்டுவந்தேன் சலாமை
யா மந்திரி.

மந்திரி-திபதை

இந்தநற்சேதியெல்லா மினியையாய்ச்சொல்வோமென்று
தொந்தமாம்பாதஷாவின் தொல்சபைதன்னைநாடி
அந்தாலோகத்தேசி யழைத்துநான்வந்தானிப்போ
வந்துநீபார்க்கவேணும் மன்னனேசலாஞ்செய்தேனே

வசனம்.

கேளும் மகாராசனே யாரோவொரு பக்கிரியானவன் தெய்வ
லோகத்துக்குநிரையைக் கொண்டு வந்திருக்கிறான் அதினுடைய கெர்
ச்சனேயொழிய வேறொன்று மில்லையாதலால் தாங்களும் மகாராசா
வும் வந்துபார்க்கவேண்டும் மகாராசனே.

பொது-திபதை.

அந்தசொல்பாதஷாவு மகிழ்வுடன்தானுங்கேட்டு
மந்திரிமுதலாயுள்ள மன்னர்கள்வருகும்போது
வந்திடுமவ்வசுவந்து வாய்திறந்துமாவிக்கத்
தந்திராபாதஷாவுஞ் சகலருமண்மேல்வீழ்ந்தார்

இதுவும்.ஆ

மூர்ச்சையாய்விழுந்தமன்னர் முதல்வனுமெழுந்திருந்து
நாற்றிசைமன்னர்காண நலமுடன்பக்கிரிதன்னை
போற்றியேதுதித்துப்பின்பு புரவியைகடத்திக்கொண்டு
நேர்த்தியாய்டில்லிதன்னில் நிலைமையாய்த்தான்வந்தாரே

வசனம்.

அதேதெப்படியென்றால் மந்திரியினுடைய சொல்லைக்கேட்டுப் பாதஷாவுமந்திரி முதலாகிய மன்னர்களும் கூடிவருகிறதைப் பாராச ரிகண்டுகளெக்க அப்போது பாதஷாமுதல சகலரும் மூர்ச்சையாய்விழு ந்து எழுந்திருந்து பாதஷாவானவர் குதிரையைக் கொண்டுவந்த பக்கிரி க்கு அநேகவெகுமதிகள் கொடுத்துக் குதிரையை நடத்திக்கொண்டு டில்லிக்குவந்து தன்னருகேயிருக்கும் மன்னர்களைப் பார்த்துச் சொல் லுகிறவிதங்காண்க.

பாதஷா-இபதை.

மந்திரிமாரேகேளீர் மன்னரேயொருவிண்ணப்பம்
இந்தகுதிரையேற வெவராவோகுமோதான்
அந்தவல்லிராசர்தன்னை யதி அரிகாதமாயிப்போ
சிந்தையிலறிந்தாக்கள் சீக்கிரஞ்செப்புவீரே

வசனம்.

கேளுங்கள் மந்திரிமுதலாகிய ராசாக்களே யிந்தபாராசாரியின் மீ தேறிச் சவாரிசெய்யத்தக்கின சாமர்த்தியமுங்களுக்குண்டா அல்லது வேறேயாராவது ராசாக்க ளிருக்கிறார்களா அதைச் சீக்கிரமாராய்ந்து சொல்லவேணும் மன்னர்களே.

மன்னர்கள்-இபதை.

தெற்கேயோனா நூற்றகாதஞ் செஞ்சிமாநகரந்தன்னை
நற்குணமுடையராசர் நலமுடனாளுகின்றார்
மன்னவரண்ணன் தம்பி மகாபலசாலியிங்கம்
தன்னையல்லாமலிப்போ தரணியில்வேறெகாணோம்

வசனம்.

கேளுமகாராசனே தெற்கே ஐந்நூற்றிருகாதவழி தூரத்திலே செ ஞ்சியென்னும் நகரத்தை யரசாளாநின்ற தேரணிசிங்கென்றும் தரணி சிங்கென்று மிருவர் அண்ணன் தம்பி யவர்கள் மகாசாமர்த்திய முள் ளவர்கள் அவரையல்லாமல் வேறேயாரையுங் காணோம் மகாராசனே.

பாதஷா செஞ்சிக்கு ஓலை யெழுதுகிற-இபதை.

இனகரன்போல்விளங்குந் தேரணிதரணிசிங்கரை
கனிவுடன் காணவேண்டிக் கடுகென வருகவென்றேன்
மனமதுவிருந்தால்வாரீர் மனமில்லாவிடளைக்கோறீர்
கனமுடனென்னையோலைக் கண்டுகொளசலாஞ்செய்தேனே

வசனம்.

சூரியனைப்போலப்பிரகாசித்துச் செஞ்சிப்பதியை யாளாநின்ற தே ரணிசிங்கு தரணிசிங்கு உங்களிருவரையும் பார்க்கும்படி சீக்கிரம் வ



ரும்படியாக வோலையெழுதினேன் ஆகையால் உங்களுக்கு வரமனதி ருந்தால் உடனே வரவேண்டியது அப்படியில்லாவிட்டால் யேதோ வொரு முகாந்தரத்தைச் சொல்லியனுப்பிவிடலாம் - இப்படிக்குப் பாத ஷா அநேககசலாம்.

பொது-வசனம்.

அதேதெப்படியென்றால் இப்படியாக பாதஷாசொல்லி யெழுதி க்கொடுக்க அதை யர்க்கார்மார்கள் வாங்கிக்கொண்டு செஞ்சிதேசத்தி க்கு ஐந்நூறுகுதிரை தபால்வைத்து தபால்மார்க்கமாக வருகிறவிதங் காண்க.

அர்க்கார்மார்கள்செஞ்சிக்குவருகிற-தரு-இ-ம்-கேதாரகௌளம்

தாளம்-ஆதி-பல்லவி.

ஐந்நூறுகுதிரைதபாலுவைத்து அர்க்கார்வாராரே

அநுபல்லவி.

மன்னவனிருபத்தை வாங்கிக்கையில்பிடித்து
முன்னதாகப்போய் மெச்சிடுவோமென்று (ஐந்)

சரணங்கள்.

செஞ்சிமன்னவனுக்கு சேதியறிக்கைசெய்ய
நஞ்சிதசொருகுடன் மிஞ்சிப்பரியின்மிதில்
தஞ்சன்டில்லியைவிட்டு காடுசெடிகடந்து
செஞ்சியைத்தேடியே சீருடனேயவர் (ஐந்)

சோரவருஞ்செஞ்சி பாரினிலபரஞ்சி
நேராகவேயஞ்சி ராஜன்சபையிலகொஞ்சி
பாராருந்தேரணிசிங்கு தரணிசிங்கைசலாம்
வாராய்ராஜனே நிருபமபாரச்சகதியென (ஐந்)

பொது-வசனம்.

அதேதெப்படியென்றால் செஞ்சிமாநகரத்தை யாளப்பட்ட ம ஹாராஜனாகிய தேரணிசிங்குமகாராஜன் வாசல்காரிக்கும் கட்டியக்கார ன் வருகிற விதங்காண்க.

கட்டியக்காரன்வருகிறதரு-இ-ம்-கல்யாணி- அடதாளம் பல்லவி.

கட்டியக்காரனும்வந்தானே சபைதனிலே
கட்டியக்காரனும்வந்தானே

அநுபல்லவி.

அங்கிஜரூபோட்டு அரையில்கச்சையுங்கட்டி
எங்கும்புகழ்மாராஜன் சிங்காசனத்தைக்கும் (கட்)

சரணங்கள்.

நெற்றியில்நாமமிட்டு கத்தியுங்கைப்பிடித்து
சற்றிடைநில்லுமென்று சந்தடியைக்கையமர்த்தி

ரத்தியாய்வித்துனவில்லாகம் திக்குறுக்கு அதிகள்செய்யும்
உத்தமன்தோரணிவாசல் உகந்துநிற்குதிப்படிபெற்ற (௮)

கட்டியன்-வசனம்.

அகோதெப்படியென்றால் இராஜமார்த்தாண்ட இராஜகெம்பீர ராஜாக்குதிரை தோரணிமகாராஜனும் தனதுதம்பி தாணிசிங்குராஜனும் மந்திரிமார்கள் புடைசூழ கொலுவுக்குவருகிறவிதங்காண்க.

தோணிராஜன்வருகிற-தரு-இ-ம-நவரோஸ்தாளம்-ஆதி.

சீரணிசெஞ்சியாளும்-தோரணிமகாராஜன்
வாரணிகள்தனமந்திரி-வணிதையர்கள்கவரிவீச
தாரணியிலராஜர்மெய்ச்சும்-தளமன்னர்புடைசூழ
கூர்விழியாள்மாதராட-கூட்டமுடன்வந்துதோன்றினர்.

எத்திசைபுகழும்ரத்தினம்-இழைத்தமுடிதரித்து
பத்தியாகமுத்துவடமாதவர்மார்பிலணிந்து
சுற்றிமன்னர்புடைசூழ-அலங்கலையலங்கரித்து
சித்திரமாதர்கட்டியஞ்செய்ய-தோரணிராஜன்வந்துதோன்றினர்.

கட்டியன்-வசனம்.

அகோகேளுங்கள் சபையோர்களே இந்தப்பிரகாரமாகத் தோரணிராஜனும் தாணிசிங்குராஜனும் கொலுவாயிருக்க அப்போது டில்லியிலிருந்து அர்க்காட்மார்கள் வர அதன்பிறகு நடக்கிற விதங்காண்க.

பொது-இபதை.

வந்தகோர்காரர்தன்னை வள்ளலுமிருக்கச்செய்து
இந்தகோரோலைதன்னை யிசைந்ததம்பியினுல்பார்த்து
மந்திரிவசத்தில்காட்டை வரிசையாயொப்புவித்து
தம்பியுந்தானுமாகத் தன்னரண்மனைதான்வந்தாரே

வசனம்.

அகோகேளும் சபையோர்களே தோரணிமகாராஜன் சபையில் அர்க்காட்மார்கள் வோலையைக் கொண்டுவந்து கொடுக்க அதையுமிருந்துபார்த்து மந்திரிவசத்தில் காட்டையொப்புவித்து தன்னரண்மனைவந்து கட்டியக்காரனுடன் சொல்லுகிறவிதங்காண்க.

இராசன்-வசனம்.

வாரும்பிள்ளாய்கட்டியக்காரா என்பிராணபதமாகிய பட்டாபிராணியை யதிசீக்கிரமாயழைத்துவாரும்பிள்ளாய் கட்டியக்காரா.

கட்டியன்-இபதை.

அதிவிதமதனவேணி யலங்கிருதசுபகல்யாணி
பதியில்வாழ்சன்தேவி பக்குவணிபட்டாபிராணி



திமலர்சுகந்தபூணி சேரிழைசமுகம்நாணி
மதிமுகமதுவலக மன்னன்முன்தோன்றினளே

வசனம்.

அகோதெப்படியென்றால் தோரணிமகாராஜன் தேவியாகிய பட்டாபிராணி சகிமார்களுடனே சபைக்கு வருகிறவிதங்காண்க.

பட்டாபிராணிவருகிற-தரு-இ-ம-பியாக்-தாளம்-ஆதி.

பல்லவி.

மதிபோன்பட்டாபிராணி மன்னனைக்காணவென்று
மதிபோலவேவந்தாள் பட்டாபிராணி

அநுபல்லவி.

அதிமோகனராக்கியலங்கிருதக்கலவேணி
சதிலேயத்தோரணிராஜனைத்தான்காணவேபூணி (௯)

சரணங்கள்.

காதில்த்திணைபோலே மீதிலொளிவிளங்க
கோதிமுகத்தல்கதிகல்பிறைவிளங்க
கோதிமலர்விதங்கள் கார்குழலிலிலங்க
நீதிபரணிதங்கள் ராஜானைமிதங்க (௯)

எத்திசையும்புகழும்ரத்தினவஸ்திரபூஷணமணிந்து
வெற்றிவேல்விழியினுஞ் சித்ரமயில்போல்நடந்து
சித்திடைதுவளவஜ்ஜிரவொட்டியாணமுமணிந்து
சுற்றிலும்வனிதாமடப்பெண்கோதைமாருடன்கலந்து (௯)

பட்டாபிராணி-இபதை.

எந்தனையடிமையாக்கு மெம்பிராணநாதாபோற்றி
இக்காசதிரிவென்னை யழைத்ததேதி
மன்னனேயடியாளுக்கு மனமகிழவுகந்தருள்
இன்னவாறென்றுசொல்வீர் நியமமாவுரைசெய்வீரே

வசனம்.

சரணஞ்சரணம் என்னையடிமையாகக்கொண்ட மகாராஜனே என்னை யழைத்தகாரியத்தை யின்னதென்று தெரியச்சொல்லும் மகாராஜனே.

தோரணிராசன்-இபதை.

மான்விட்டராணியேகேள் யோசனையடல்வியாளும்
மன்னவன்பெரியராசன் வாவென்றசேதிசொன்னார்
இன்றுநான்போகவிட்டா தெப்போதுமானவியாளும்
மென்மகாராஜன்முன்னே சீக்கிரஞ்செலவுதாராய்

வசனம்.

கேளும் என்பிராணப்பசமான பெண்ணே டில்லியையாளப்பட்டசக்கிரவாசிய பெரியராசன் பெயக்கொலைச்சொல்லி யோலையனுப்பினாராகளைப்போகவேணும் போகாவிட்டால் கெடுதிநேரிடும் ஆகையால சிக்கிரம செலவுதாரும்பெண்ணே பிராணநாயகி.

பட்டாபிராணி-இபதை.

என்னிடபிராணநாதா யிருவரும்போறீர் டில்லி
கன்னிகாய்செப்பமையா கடுகெனவந்துசேர்வீர்
இங்கிருவிட்டுப்போனால் லெத்தனைநாள்கள்செல்லும்
மன்னனே சொல்லிச்சென்று மகிழ்வுடன் வருகுவீரோ

வசனம்.

கேளும் என்பிராணநாட்சயரே நீங்களிருவரும்டில்லிக்குப்போகிறீர்காள் ஐநூறுமாதஞ்செல்லுமாகையால் எப்போதுவருவீர் அதையெனக்குச்சொல்லிவிட்டு சீக்கிரம்போய்வாருங்கள் பிராணரட்சகரே.

தோணிராசன்-இபதை.

அன்னமேபட்டாபிராணி யயர்துகாளையில்போய்ச்சேர்வோம்
மன்னவன்மொழியறிந்து வருவதுவைக்துநாள்தான்
பன்னியபதுநாளில் பறந்துநாம்வருவோமிங்கே
வுன்னியபாங்கியோடு வுறுதியாயிருந்திடாயே

வசனம்.

வாராய்பெண்ணே ஐந்துகாளையில் போய்ச்சேர்வோம் திரும்பிவரவைந்துநாளசெல்லும ஆகபத்துகாளையில் இவ்விடம்வருகுவோம் பங்கியருடனே சுகமாயிரும்பெண்ணே.

தோணிராசனும்-தாணிசிங்கும்-டில்லிக்குவருகிற

தரு-இ-ய-காட்டைதாளம்-திரிபுடை.

புல்லவி.

போவோம்வாருந்தம்பி டில்லியைநாடி
போவோமவாருந்தம்பி

அநுபல்லவி.

போவோம்டில்லிராசன்புகழ்மைக்கெழுந்தோர்
ஆவலதென்னவறிந்து அட்சணமவருகுவோம் (போ,

சரணங்கள்.

பெருமையுடனேநம்மை வரவெனச்சொல்லின
அருமையாளடில்லி யாசனோமகவடு
குறைவதுவருகாமல சரிசொல்லிவிடந்தாக்கால்
கோடிகாவுமக்மேல் கோபமில்லையாரோசன் (போ)



பொது-இபதை.

ஐம்பத்தாறுதேசராசரனைவரும்டில்லிதன்னில்
மன்னர்கள்கொலுவிருக்க மகிபருமவந்துசேர்ந்தார்
மன்னவன்டில்லிராச னன்புடனழைத்துமேன்மை
பொன்னணிசிம்மாதனத்தில் புகழுடனமர்த்தினானே

பாதஷா-இபதை.

அனைவருங்கேளீர்காதொரு திசயஞ்சொல்லுகின்றேன்
மனமதுதளரவேண்டாம மன்னனேபுரவிபொன்று
கனமுடனெகதனன்னை கட்டினேன்வைத்தேனிப்போ
இனமுடன்சவாரிசெய்ய வெவராலேயாகுஞ்சொல்வீர்

வசனம்.

கேளுங்கள் ஐம்பத்தாறுதேசத்து ராசாக்களே நான்குதிரையொன்றுகட்டிவைத்திருக்கிறேன் அதன்மேலேறிச் சவாரிசெய்யத் தக்கசாமர்த்தியமுள்ளவர்கள் யாரோ அதைச்சொல்லுங்களராசாக்களே

இராசாக்கள்-இபதை.

அண்ணலேடில்லிதன்னில் அஸ்வத்தைச்சவாரிசெய்ய
என்னமோபெரிதாய்ச்சொன்னீர் எவராலுமாகாதேதான்
மன்னவர்காட்டும்காங்கள் மனமதுமகிழ்ச்சியாகச்
சின்னமவாராமலிப்போ சீக்கிரமேறுவோமே

வசனம்.

கேளும் மகாராசனே இந்தடில்லியி லிருக்கிற அஸ்வத்தைச் சவாரிசெய்ய யாராலுமாகாதோ ஆனாலதைக்காட்டும நாங்களிப்போதேயேறிச்சவாரிசெய்கிறோம் மகாராசனே.

பாதஷா-ஆசிரியவிருத்தம்.

பரியேறிச்சவாரிசெய்கின்றவராசர்க்குப் பகுதிமேலமாப்புசெய்வேன், பாரிலுள்ளோர்மெய்ச்சப் பாக்கியமுமகிழ்ந்தே பணிபூஷணங்களீவேன், திக்கெனப்பயந்துமனமங்கிடக்கீழேவிழுந்தால் அதுமின்றபேஷ்க், கைக்கிகிரிபகாவலாய்மிக்கஜெயில்காறையில் பக்குவமாயேழுவருஷம், கைகட்டியெனனன்னை காவலாய்நீங்களும் காத்துமேதானிருக்கும் மிக்கசிறையாகவேயிருந்துபின் தன்றுட்டை யீளவேயனுப்புவேன்யான், அப்படிக்குங்களுக்கிஷ்டமோமாராசரே யனைவருமறிந்துகொள்வீர், இப்படியெனமனராசிசெப்பினோனுங்களுக் கெழுந்திருஞ்சலாஞ்செய்தேனோ.

பொது-இபதை.

அப்படி சரியேயென்று றனைவரும் வருகும்போது
செப்பினகெழுந்து திக்கெனவு றுமனிக்க

குப்புறமண்மேல்வீழ்ந்து குலவ்யத்தரசரெல்லாம்
அப்புறமெழுந்திருந்து வினைவருமேதுசொல்வார் (

வசனம்.

அகோதெப்படியென்றால் இப்படியாகப் பாதஷாசொல்ல அசற்கினைவருஞ்சம்மதித்து வரும்போது பாராசாரிகண்டு அடட்டிக்கனைக்க வந்த அரசரெல்லாம் மூர்ச்சையாய்விழுந்து பிறகு எழுந்திருந்துசொல்லுகிறவிதங்காண்க.

தோணிராசன் முதலானோர்-இபதை.

எங்களாலாகாதையா விக்தாற்குநிகரோபேறத்
தங்கியேசிறையிருந்து தவிசுகர்போரேறும்காங்கள்
திசைகளாம்புரவிதன்னையெத் திசையுங்கண்டதில்லை
இங்கேதானேவல்செய்வோர் பேறுவேமாட்டோமையா

வசனம்.

சேருமகாராசனே யிந்தப்புரவியை யெந்தத்திசையுங்கண்டதேயில்லை யாகையால் ராசகளிவ்விடத்தில் ஏவல்செய்திருப்போமே யெறமாட்டோமையா மகாராசனே.

பொது-இபதை.

தோணிராசன்தானுஞ்செஞ்சிக்குதிரைபம்போடக்
காரணிபட்டாபிராணி கலங்கியேயிருக்கும்போது
சீரணிகெர்ப்பமப்பேர் சென்றுமேபத்துமாதம்
வோணிமனதுநொந்து வெம்பியேபுலம்புவாளே

வசனம்.

அகோதெப்படியென்றால் டில்லியி லினைவருஞ் சிறையிலிருக்க அவரவர்கள் தங்கள் தங்கள் தேசத்திற்கு ஓலையெழுதிவிடத் தோணிராசனுஞ் செஞ்சிக்கு ஓலையெழுதிப்போட அதைக்கண்ட பட்டாபிராணியானவள் மனதுகலங்கி வியாகுலத்துடனிருக்கும்போது கெர்ப்பமானது பத்துமாதம் நிறைவேறிக் கெர்ப்பவேதனை படுகிறபோது புலம்புகிற விதங்காண்க.

பட்டாபிராணிபுலம்பல்-தரு-இ-ம்-அசாவேரிதாளம்-ஆதி.

ஸ்ரீரங்கநாயகநாபங்கஜலோசனுநம்பிநேனுச்சரணம
ஸ்ரீபிரான் அரிஅரிபங்கஜபங்காளனே
என்மனதிலுள்ளவிடாதைதக்கரும்
அன்னையேசகிமாரே யென்னடியெந்தனுக்கு
புண்ணுவென்றிரேகமெல்லாம் பொடியாகப்போகுதம்மா
கண்ணில்பார்த்ததில்லை காதிலுங்கேட்டதில்லை
மண்ணுலகிலுள்ளபேர்கள் மெய்ப்படி சகிப்பாரோ (ஸ்ரீ



ஜனையபோலென்னமாய மகிருதேயெந்தன்கைகால்
செய்பாவினையிதுவோ செப்படிதோழியரே
அப்பியேகாவென்னசெய்வே னிப்படியுறாண்டோவம்மா
கற்டனெசெய்யாதேயென்னைக் கண்பாரும்பாந்தாமா (ஸ்ரீர)

பொது-வசனம்.

அகோதெப்படியென்றால் பட்டாபிராணியானவள் இப்படிபுலம்பும்போது மருத்துவச்சி வருகிறவிதங்காண்க.

மருத்துவச்சிவருகிற-தரு-இ-ம்-பந்துவராளி-தாளம்-ஆதி.

வங்கணமாகவேதள்ளாடித்தள்ளாடி மருத்துவக்கிழவிவந்தாள்
கூனிகிமிர்ந்துமருத்துவக்கிழவிவந்தாள்

சங்கையில்லாமலேநான்தொட்டவிடமெல்லாந்
தழைத்துப்பிள்ளைபெற்றுப் பிழைத்துநன்றாய்நிலைத்து
சதிருடன்வாழ்வென்று சாமர்த்தியமேபுகன்று (வங்)

எடுத்தடிவைக்குமுன்னேயிறைத்திறைத்தேநடுங்கி
யெத்தனைதூரமென்றே யெண்ணிக்கொண்டேயொடுங்கி
கடுத்தமாகவேபேசிக்கோலையூன்றிக்கொண்டு
கண்ணைவிழித்துப்பார்த்துஅவிழ்ப்பித்தக்
கலையையிடையிற்சேர்த்துக் குகைபோல்வாயிற்பொங்கிக்
கோடுவாய்வழிந்தொழுகக் குறட்டையிழுக்கநீண்ட
அருக்குபோல்முலைசுழுக்குத்தியிருந்துயெழுந்திருந்து
குணிகுணிவெள்ளறுமணமுணமென்றுகளைக்
கொழுந்தசிறுக்கிகளெள்ளைப்பிழைக்கவொட்டார்களென்ன ()

வசனம்.

ஏண்டி சக்களத்திமக்களே யென்னையேண்டி யலட்டுகிறாய் எனக்கொவல கண்ணுதெரியுதா மண்ணுதெரியுதா நடக்கக்கூடுதா அடி சும்மாவிருந்தாலு மிந்தவொட்டிலேயே நீயேநல்லஆண்பிள்ளையைப்பெறுவாய் பயப்படாதேயம்மா பயப்படாதே.

பட்டாபிராணி-இபதை.

எப்படியப்படாம லிருப்பதென்செய்வேனம்மா
குப்புறக்கவிழ்ந்தாலும் குனிந்துமோகிபிரண்டாலும்
நப்பிலாக்கைகால்சோர்ந்து தளருதேநாவுலர்ந்து
செப்பமாய்நிற்கொணாது இரண்டுநாளாகுதம்மா

இதுவும் அது-அகவல்.

மாதத்துவமாதே வயிறெலாந்நோகுது
பொருந்தவுடைவசந்து பெருமூச்சுவருகுது
முதுகெலாமுனக்குது முழுபுரளுது

வனவாசத்தில் வந்துமுட்டிது
உத்தியோரா யொருகுடக்கிரண்டு
ஜதக்குதிரைவயிறு சரியுதென்னடியோ
கன்னியேயென்னைக் கைவிடாதம்மா
செல்வியாஉன்னைச் சேவித்தேனம்மா
என்செய்வேனம்மா வென்செய்வேன்சகியே
யெப்படிபொறுப்பேன் வகிறைம்மாதே

பொது-திபதை.

மங்களஞ்சேர்ஸ்ரீரங்கர் மகிமைதன்கடாட்சத்தாலே
பொங்குபூலோகமெங்கும் பூமலர்பொழிந்துவீச
இங்கிதசிம்மலக்கினத்தி லீன்றதோர்மைந்தனுக்கு
தங்கதேசிங்கனென்று தனிப்பெயர்தானிட்டாரே.

வசனம்.

அகோகேளுங்கள் சபையோர்களே பட்டாபிராணியானவள் சிம் லக்கினத்தில் பிரசவிக்க அந்தக்குழந்தைக்குத் தேசிங்கு என்றுபெ ரிட்டுத் தாலாட்டுகிற விதங்காண்க.

தாலாட்டுதல்-தரு-நீலாம்புரி-தாளம்-ஆதி.

ஆராரோ ஆராரோ ஆராரோ ஆராரோ
தாரார்மணிமார்பன் தவமேயுருவமே (ஆராரோ
தேனூறல்பாயுஞ் செழுமாங்கனியமுதே
வானோர்புகழ்ந்த வள்ளலேகண்வளரீர் (ஆராரோ
செங்கரும்பின்பாகுஞ் செழுந்தாமரைத்தேனும்
பொங்குபசும்பாலினிமை புகழமுதேகண்வளரீர் (ஆராரோ
பத்தரைமாற்றுப் பசும்பொன்னிழைத்த
சித்திரப்பொற்றொட்டிலிலே சீராகக்கண்வளரீர் (ஆராரோ
இத்தரைக்கரசாய்த் திருவுலகோர்கொண்டாட
பிருதுபலத்திலும் வேல்மன்னர்போற்றவே (ஆராரோ

பொது-திபதை.

இப்படியாகத்தானே யின்பமாய்வளர்ந்தப்பின்னும்
தப்பிதமில்லாதகுல தனிப்பள்ளிக்கூடமதலக்கப்
செப்பருவெழுத்தாணியின் சிறப்புடன்வாசிக்கின்ற
ஒப்பிலாமெழுத்தாளு முதலியாய்க்கூடினானே

இருவரும்.

இருவருங்கூடித்தால்பிக்காளுக்கு விட்டம்
பதிவுடனுதப்பின்பு பார்வையைசேட்டையாடி.



அருமையாய்த்தன்னைப்பெற்ற வன்னையினருகில்வந்து
அரிதமாயடிபணிந்து தொழுதுகைகட்டிச்சொல்வான்

வசனம்.

அகோகேப்படியென்றால் இப்படியாகவளர்ந்து ஐந்துவயதான பிறகு பள்ளிக்கூடத்திலவைக்க அப்போது எழுத்தாணியில பிறந்தும மோவுத்துக்காரனும் கூடவந்து சகலசாஸ்திரங்களும் கற்றுச் சிலம்பக் கூடமென்கிற தால்பிக்காளுக்கு பிறந்தும ஆயுதப்பிட்டசையுனைத்துந்தாக றுவலங்களில்வேட்டையாடி பிறந்தும் தக்கதுந்தகுந்தாகவே வித மாயிருக்குங்காலத்தில் ஒருநாள்தேசிங்குராசனானவன் மாதாவினிடம் வந்து அடிபணிந்து சொல்லுகிற விதங்காண்க.

தேசிங்குராசன்-கொச்சகம்.

பின்னையென்றைத்தனைப்பெருமையுடன்தான்பெற்ற
வள்ளலாமென்றகப்பன் வரதனையொத்தவனுக்கு
உள்ளாடிகொண்டு இதுபெயதாயனாருமிப்போ
என்னளவும்பிசகாம லினித்தாய்நடந்துவனே

வசனம்.

கேளும் என்னைப்பெற்றதாயாரே எனதுபிதா வர்கள் அவர் கால விடம்போயிருக்கிறார் அதையெனக்கு அதிசீக்கிரத்திலசொல்லுமம்மா தாயாரே

பட்டாபிராணி-திபதை.

அப்பனேகேளாய்டில்லி பாணதோர்பட்டணத்தில்
செப்பருங்குதிரையேறச் சேர்ந்துமேபோனாரப்பா
ஒப்பிலாப்பரியின்மீது ஓடியேசவாரிசெய்யத்
தப்பிதமென்றுவெண்ணித் தனிச்சிறையிருக்கின்றாரே.

வசனம்.

கேளாயென்னாருமையுள்ளமகனே டில்லியென்றபட்டணத் தில் ஒருகுதிரையின்மீது ஏறிச்சவாரிசெய்ய மாட்டாமல் சிறையிருக்கி றார் என் கண்ணின்மணியே

தேசிங்குராசன்-திபதை

அப்படியானால் வருஞ்சிறைதன்னையுமீட்டுக்
கொப்பெனக்குதிரைதன்னைக் கொண்டுகொல்லுவேன்ராய்
சப்பிதர்வருகதம்மா தாயேநீனமபொறுத்து
இப்பவேயனுப்புமென்னை யிணையடிபோற்றிபோற்றி

வசனம்.

கேளுமம்மாதாயே நான்போய் அந்தக்குதிரையைச்சவாரிசெய்து பிதாக்களையழைத்து வருகிறேன் எனக்கு விடைகொடுமம்மாதாயே

பட்டாபிராணியுந்தேசிங்குராசனும்

தர்க்கப்-தரு-இ-ம்-புன்னுகவராளி-அடதாளம்

(பட்) என்னவார்த்தைசொல்லவந்தாய் என்மகனே
எப்படிமுடிக்கிறதோ என்மகனே

(தேசி) முடிவதென்னவிள்ளைக்கு என்தாயே
முன்னர்நடக்கவேண்டும் என்தாயே

(பட்) நடக்கும்வழியறிவாயோ என்மகனே
நாடிப்போகவேண்டாம் என்மகனே

(தேசி) போகவேண்டாமென்றுரைத்தால் என்தாயே
பொறுக்கமுடியவில்லை என்தாயே

(பட்) என்னைவிட்டுப்பிரிந்தால் என்மகனே
எனக்குயிர்தரிக்காதப்பா என்மகனே

(தேசி) எப்படியும்போய்வருவேன் என்தாயே
இட்சணஞ்செலவுதாரும் என்தாயே

(பட்) போய்வருவேனென்றுசொல்லல் என்மகனே
பொக்தியுமதுன்றுகடா என்மகனே

(தேசி) மகனேமகனேயென்று என்தாயே
மண்மேல்விழுந்தழாதே என்தாயே

பொது-இபதை

அன்னையும்புரண்டழுது வலறியேமூர்ச்சையாக
மன்னவன்தேசிங்குராசன் மனமொதுகமோவுந்தானும்
அக்கிலந்தன்னைவிட்டு அடவிகள்தனைக்கடந்து
சொன்னதோர்டில்லிபட்டணஞ் சுருக்கினில்தானவந்தாரே

வசனம்

சேனுஞ்சபையோர்களே இப்படியாகப் பட்டாபி ராணியம்மாள் மூர்ச்சையாய்விழ தேசிங்குராசன் அரண்மனை விட்டுவெளியில் வந்து மோவுந்தக்காரனையழைத்துக்கொண்டுவனவறுஞ்சிரங்கள் கடந்து டில்லிபட்டணம்வந்தபாதுஷாவினுடைய கொலுவில்வந்து சொல்லுகிற விதங்காணுக

தேசிங்குராசன்-இபதை

சுசுதாடில்லிவேந்தே சுபமுள்ளகுதிரைவொன்று
விக்கையாயிருக்குதென்று விளையமுங்கேட்டுவந்தேன்
அந்தக்புரவிதன்னை யழைப்பிப்பீர்சவாரிசெய்து
தந்தையாரிருகாற்றளைத் தடையின்றிமீட்டுப்போவேன்



வசனம்

பேரும் மகாராசனே உம்மிடத்தில் விந்தையான புரவியொ இருக்கிறதாம் அதைநானேறிநதால் நான்சவாரிசெய்து எனதுதந் மாரக்னே மிட்டுக்கொண்டுபோவேன் மகாராசனே

பாதஷா-வசனம்.

அலை செய்தசக்கிதோஷம் உனது ஊர்பெருங் ரன்பேரும் உன் தாய்தப்பன்பேரும் தெரியச்சொல்லவேணுமப்பா சிறுபிள்ளாய்

தேசிங்குராசன்-இபதை

என்தனூர்செஞ்சிபட்டணமெனதுபேர்தேசிங்கென்பார்
தந்தைபேர்தரணிசிங்கு தாயின்பேர்பட்டாபிராணி
வாதுதோதவ்வந்தன்னை வகையுடன்காட்டுமிப்போ
சிந்தையுமகிழுவதாகச் சிக்கிரஞ்சவாரிசெய்வேன்

வசனம்

கேளும் மகாராசனே என்கன் ஊர் செஞ்சி யென்போர்தேசிங்கு தந்தைபேர் தரணிசிங்கு தாய்பேர் பட்டாபிராணி உங்களிடத்திலிரு க்கிறகுதிரையைக் காட்டும் சவாரிசெய்யவேணும் மகாராசனே

தோணிராசன்-தரணிசிங்கு-இபதை

மைந்தனேதேசிங்குபாலா மனமகிழ்தானிந்தயிப்போ
உந்தனைப்பெற்றதாயு முலகந்தன்னையனுப்பினளோ
சிந்தையுங்கலங்குதேடா செல்வனேபோகவேண்டாம்
வந்துநீசேர்வதப்பா வருத்தமதாகுந்தானே

வசனம்

அப்பா வென்னருமைமகனே உன்னைப்பெத்ததாயானவள் மன மகிழ்ந்து உன்னை யனுப்பினளோ என்கனிந்தையுங்கலங்குதே க்கீக்குதிரையின்மீதேறினால் வந்துசேர்வது மகாவருத்தம் நீபோகவேண டாமப்பாமகனே

பாதஷா-தல-சகலருஞ்சொல்-இபதை

அப்பனே மகனேசாதக னெப்படி சவிப்போயிப்போ
ஒப்புடனுன்னைப்பெற்ற வுத்தமியுயிர்வையாளோ
தப்புவதரிதேயப்பா தலத்தினில்நிலத்தியாலர்
செப்பிடுமுந்தனக்குத் தேசிங்குபாலாவேண்டாம்

வசனம்

அப்பாமகனே நாங்களெப்படி சண்ணிறந்து கேவ் ரோ முன்னைப்பெற்றவுத்தமியானவள் உயிர்வைத்தி தி குதிரையின்மேலேறினால் மோசமவரும் தே- எதேவேண்டாமப்பாதேசிங்குபாலா

தேசிங்குராசன்-திபதை

மண்டலத்தோரே சேவீர் மடியாமலிருப்போர் நீங்கள்
காதலியைமறமன்று வெய்யோதுமசாவுமெய்யோ
வந்துகான் சொக்கேதுனுல் மகவென்றுவெண்ணிக்கொள்ளும்
கமைதருமடிக்கேதுனுல மனமருந்தளரவேண்டாம்

வசனம்

பூமண்டலத்தைபரபாலருமென்ற இராசாக்களே நீங்களெப்பொழுதும்சாகாம லிருப்பீர்கள் மெய்காந் என்னைப்பெற்ற பிதாக்களே நான் இந்தகுதிரையின்மீது சவாரிசெய்து வந்தேனானால் பிள்ளையென்று நினைத்துக்கொள்ளுங்க இறந்துவிட்டேனானால் நீங்கள் வியசனப்படவேண்டாம் பிதாக்களே மகாராசர்களே

பொது-வசனம்

அநேகசெப்படியென்றுல் தேசிங்கு ராசனானவன் இப்படியாகச்சொல்லிவிட்டு பாரசாரியிடம்வந்து அதைதட்டிக்கொடுத்து அதின்மேலேறி அப்போது அந்தப்பாரசாரியானது ஆகாயமார்க்கமாகயெழும்பி வருகிறவிதங்காண்க

பாரசாரிதேசிங்குராசனை ஆகாயமார்க்கங்கொண்டுபோகிற

தரு-இராகம்-அசாவேரி-அடதாளம்

பல்லவி

வெகுண்டெழும்பினதே பாரசாரி
பதுமெழும்பினதே

அநுபல்லவி

காரணஸ்ரீரங்கநாதனைநேசமாதவாவென்று
ஏறியேபுரவிதன்னையேமங்கபோலசாடவே (வெகு)

சரணங்கள்

தாரணிதனிலேயாரும்பயக்கவந்த
சீரணிதேசிங்கின்மேலதேசிங்குகானே
கணமதேகதிரதனைக்கண்டுபுரவிபோகப்
பகவானேதுணையென்றுபக்கஞ்சிமிட்டாகொடுக்க (வெகு)

செகமைந்தனைக்கொண்டு தென்றிசைபாயவே
பதறிப்பக்கத்திலே சிமிட்டா பார்த்துக்கொடுக்கவே
தென்னிலங்கையைசுற்றித் திசைத்துவந்தபின்பு
இதிலெல்லாங்கடந்து இந்திரலோகதலத்தேடி (வெகு)

மன்னன்தேசிங்குதனை வணக்கவேறுவென்று
இன்னமேகந்தரவெழும்பிவருகும்போது



கண்மணிபாலனுக்குக் களைகள் வந்திறனே
அண்ணல்ஸ்ரீரங்கநாதரிந்ததட்சணமவர (வெகு)

பொது-திபதை.

அந்தஸ்ரீரங்கநாதர் மைந்தனைக்கையால்கொட்டு
சிகதனைக்கும்போது சிரியேகண்டிறந்து
மாதவாரங்காவென்று மலர்ப்பாதம்போற்றிசெய்ய
சீதாலஸ்வந்தன்னைத் திருப்பியேயேதுசெல்வார்

வசனம்.

அநேகசெப்படியென்றுல் ஸ்ரீரங்கநாதரானவர் வந்துதேசிங்குராசனைத்தட்டிக்கொடுத்தவுடன் களைதெளிந்து மாதவாகேசவாவென்று தோத்தரிக்க ஸ்ரீரங்கநாதரானவர் குதிரையைத்திருப்பிச்சொல்லுகிறவிதங்காண்க

ஸ்ரீரங்கநாதர்-திபதை.

பண்புருபரியேகேளாய் பாரினிற்போய்ச்சேர்ந்து
கண்மணிபாலன்தன்னைக் காப்பாற்றியிருப்பையானல்
புண்ணியன்தேசிங்குபாலன் போர்செய்வான்கொஞ்சகாலில்
உண்மையாயுந்தனுக்கு முறுதியாய்மோட்சந்தாரோம்

வசனம்.

கேளுரி பாரசாரியே தேசிங்குபாலனுடன் பூலோகம்போய்ச்சேர்ந்திருப்பையேயானால் கொஞ்சகாலில் யுத்தியம்வரும் அப்போது உன்னையும் வைகுந்தத்திற்கு வரவழைத்துக் கொள்ளுகிறோம் பாரசாரியே

இதுவுமது.

தீரனேதேசிங்குபாலா திருப்பியேகுதிரைதன்னைப்
பாரினில்டில்லிசேர்ந்து படைமன்னர்மிகவேகுழச்
சீருடன்செஞ்சிபாண்டி சிறப்புடனிருந்துபின்பு
தாரணிதனிறபோர்செய்வாய் தடையின்றிப்பதவிதாரோம்

வசனம்.

கேளும் தேசிங்குபாலனே குதிரையைத்திருப்பி டில்லிக்குப்போய்ச் சகலராசரும்பணியச் செஞ்சியையரசாண்டுபின்பு கொஞ்சகாலயில் சண்டைசெய்வாய் அப்போது உனக்குப்பதவிகொடுக்கிறோம் தேசிங்குபாலகனே

பொது-திபதை.

அந்தசொல்லிராசன்கேட்டு அம்புன்னகுதிரைதன்னை
விக்கையாய்த்திருப்பிக்கொண்டு மேன்மையாய்டில்லிசேர
வந்திடுமதனைக்கண்டு வாழ்த்தவுமன்னர்போற்ற
சொந்தத்தோர்பார்த்தாலும் கொடியிலேதுசொல்வான்

வசனம்.

அகோகேளும் சபையோர்களே சிங்கநாதர்சொல்லைத் தேசிங்குராசன்கேட்டு குதிரையைத்திருப்பிக்கொண்டு டில்லிக்குவர அப்போது தோணிராசனும் சரணிசிங்குராசனும் எதிர்கொண்டழைத்துச்சகல ஆரசரும் போற்றப் பாதஷாவும் மிகுந்த களிப்புகொண்டு தேசிங்குராசனைத் தழுவிச்சிம்மாசனத்திலுட்காரச்செய்து மந்திரியைப்பார்த்துச் சொல்லுகிற விதங்காண்க.

பாதஷா-திபதை.

மந்திரிராசசிங்கா மன்னவன்தேசிங்குக்குச்
சொக்கமக்களுக்குமித்தின் சொர்ணதனைக்கப்பங்கட்டி
தந்திகள்முதலாயுள்ள தளங்களையிவ்வுங்கூட்டு
இந்தக்குதிரைதன்னை யினமதாயீந்திடாயே

வசனம்.

கேளும் மந்திரி இந்தத்தேசிங்குமகாராசனுக்கு நமது கஜானாவிலிருந்து பொக்கிஷத்தை யெடுத்துப் பகுதிகட்டி ஆனைமுதலா யுள்ளதளங்களையு மெனக்கூட்டி இந்தப்பாராசாரி குதிரையை யினாமாக்கொடுத்துவிடு மந்திரி

பொது-திபதை.

முத்தாரம்சந்திரரம் மோகனமாலையின்னும்
பதக்கமோதிரங்களும் பரிசிலேவனிதன்னை
சந்திகைபுக்குரோமவும் கனகுக்கினைக்கவிருந்து
வெற்றியாயடில்லிராசன் மோச்சமையாயனுப்பினானே

இதுவுமது.

அங்கிருந்தராசரெல்லா மனைவருந்தெலவுபெற்று
மங்களமுடனாராசர் மைத்தனேமிகக்கொண்டாடி
இங்கெனுமுசிந்தனென்று தேடியேதங்கள்தேசம்
பொங்கமாய்ப்போவதற்குப் புறப்பட்டார்ராசர்தானே

இதுவுமது.

வீரமட்டாதுவெற்றுக்கொண்டு வீரல்மன்னவன்மோவுதகானும்
தனையின்பிரதானிகக்கூட்டித் தனித்தெருசிலந்தாயபேர்
மடமயிலக்கன்னிமார்கள் மகிழ்வுடனுனாதிக்குற
கடவுளைத்துதித்துமன்னா களிப்புடன்மனைவந்தாரே

பொது-வசனம்.

அகோதெப்படியென்றால் மோவுத்கானுக்கு அனேகவெகுமதிகளும் தனைஅப்பட்டத்தக்குதிரையாகிய நீலவேணியையு மெகுமாகக்கொடுத்து தேசிங்குராசன்முதல் சகலமானபேர்களுக்கும்விடைகொடுக்க அவரவர்கள் தங்கள்தேசத்திற்குப் போய்விட்ட தேசிங்குராசன்



முதல் சகலரும் செஞ்சிக்குவர அதைக்கண்ட கன்னிமார்கள் ஆலாத்திசுற்ற அதிகமகிழ்வுடன் அரண்மனைவந்துசேர்ந்து மறுநாள்தோணி மகாராசன் கொலுவுக்கு வருகிறவிதங்காண்க.

பொது-திபதை.

தோணிராசன்தானும் தேவியுந்தமையனுண
னாரணன்சரணிசிங்கும் கண்மணிபட்டபிராணி
ஆரணிதேசிங்குபாலன் சிறப்புள்ளமந்திரிகூட
பாரினில்சபையோர்போற்றப் பாங்குடன்செஞ்சியாண்டார்

இதுவுமது.

இப்படிசிறிதுகால மிருந்தாசாளும்நாளில்
செப்பிடுஞ்சரணிசிங்கு சேர்ந்தனன்வைகுந்தமோட்சம்
தப்பிலாப்பட்டபிராணி தானுமேமாதந்தனைச்சேர்ந்தாள்
அப்புறந்தேசிங்குடையாண்டனன்தோணிசிங்கே

வசனம்.

அகோதெப்படியென்றால் தோணிராசனும் அவர்மனைவியும் சரணிசிங்குப்பட்டபிராணியும் தேசிங்குபாலகனும் மந்திரிகளுமுடன்கூடிச் செஞ்சியை யாண்டிருக்கும்நாளில் சிறிதுநாள்சென்றபிறகு தேசிங்குமகாராசனுடைய மாதாபிதாக்களிருவரும் வைகுந்தபதவியடைய அதன்பிறகுசிறியதகப்பனான தோணிராசன் தேசிங்குராசனை வளர்த்துவரும் நாளில் தேசிங்குராசனுக்குப் பட்டங்கட்ட வேண்டுமென்று தன்பட்டதேவியாகிய ராணியைப்பார்த்துச்சொல்லுகிற விதங்காண்க.

தோணிராசன்-திபதை.

தக்கதோராசன்தானும் தராதலம்விளங்கவேண்டிப்
பக்குவமாயிருக்குமெந்தன் பட்டதேவியேகேள்
திக்குமோசுதன்தனக்கு வுலகெலாமறியப்பட்டம்
தக்கமோபெண்ணேயிப்போ சனுதியிதுனைசெய்வாயே

வசனம்.

அகோவாரும் பெண்ணே பிராணநாயகி நமதுமகன்தேசிங்குராசனுக்குப் பட்டங்கட்டவேண்டிய தானபடியினாலே உன்மனதிலிருக்கிறதைத் தெரியச்சொல்லும் பிராணநாயகி

இராணி-திபதை.

எப்போவென்றிருந்தேன்யானும் பொன்றவிடபிராணநாத
மைப்பருமயில்பான்ராணி மங்கையானவளுஞ்செய்து
சொற்படிதுவாவெனக்கு சுதன்தனைப்புவியில்மெய்ச்ச
அப்படியாகத்தானே மகுடமேர்பட்டந்தானே

வசனம்.

அகோவாரு மென்னிட பிராணநாதா தேசிங்குராசனுக்கு உம்மி டகாயமு மெய்மிடகாயமு மிருக்கும்போதே விவாகஞ்செய்து பட்டமுங் குட்டுமையா பிராணநாதா

இராகம்-தரு-இ-ம்-அசாவேரி-தாளம்-ஆதி.

விசித்திரமாய்ச்செஞ்சியாளும்மகாராசன் மன்னவனே நான்
பத்தியதாய்ப்போற்றிவளர்த்தசுதனுக்கு மன்னவனே நீர்
இத்தினசகாணவேயெங்கமணம்புணவே மன்னவனே நான்
சித்தப்பன்மகளிடதேவிமகள்ராணி மன்னவனே அவளை
வைத்துமணஞ்செய்துபட்டம்குட்டுமையாமன்னவனே அவள்
வித்தையுமபுத்தியுமமேகிஷிவிலதிவைடயாது மன்னவனே மிக்க
சித்திரமாகத்திஸ்செய்யகல்யாணம் மன்னவனே நான்
கண்ணினாலேகண்டுகளிப்பைபிகவடைய மன்னவனே

தோணிராசன்-வசனம்.

அகோவாரும்பிள்ளாய்கட்டியக்காராநம்மிடபஞ்சாங்கஞ் சொல்லு ம பிராமணசோசியனை அழைப்பியும்பிள்ளாய் கட்டியக்காரா

கட்டியக்காரன்-வசனம்.

அப்படியேயழைப்பிக்கிறேன்சுவாமி

பொது-இபதை.

சத்தியமாய்மறையோர்தானும் பாக்குடன் பூணூல்பூண்டு
வெற்றியாய்நாமமிட்டு வெகுந்தவேஷ்டி உடுத்தி
சித்தம்பஞ்சாங்கங்கொண்டு மிமிஷத்திலவனிக்குமல்ல
புத்திமாபரங்கநாதர் புவித்தவந்தனர்வந்தாரே

வசனம்.

கேளும்சபையோர்களே தேசிங்குராசனுக்குக் கலியாணம்செய்ய நாள்பார்த்துக்கொடுக்க ரங்கநாதசாஸ்திரிபார்வந்து தோணிமகாராசனுக்கு ஆசீர்வதிக்கிற விதங்காண்க

இரங்கநாதசாஸ்திரியார்-வசனம்.

ஞானகாணிபப்சுபுத்திரலாபவஸ்திரஸ்து ராசகலசாம்பிராச்சியத்திர்க்கா யுசுவஸ்திரஸ்து ஆச்சகிராத்தம் வரம்சிசாபிவிர்த்திரஸ்து சுபிரவா கோணிமகாராசனே ஆசீர்வாதம் ஆசீர்வாதம் என்னையழைப்பித்தகாரியம் தெரியச்சொல்லும் மகாராசனே

தோணிராசன்-இபதை.

வாரும்ஸ்ரீரங்கநாதசாஸ்திரியேசொல்லக்கேளாய்
விருமென்மகன்றனக்கு விளங்கவேபாணிக்கிரணம்



சேரவேபட்டங்குட்டி இருமுடி தரிக்கவேண்டும்
நம்மீர்முகூர்த்தமவைத்துக் குறிப்புகள்சொல்லுவீரே

வசனம்.

அகோவாரும் இரங்கநாதசாஸ்திரியே யென்குமாரன் தேசிங்குராஜனுக்கு கலியாணஞ்செய்து பட்டங்குட்டவேணுமென்கிறபடியா ல் பொருத்தமிதமமைத்து நல்லதினம் பார்த்துச் சொல்லுமையா சுவாமி.

இரங்கநாதசாஸ்திரியார்-தரு-இ-ம்-கலியாணி-அட-தாளம்.

பல்லவி.

பார்த்துச்சொல்லவேனோ பஞ்சாங்கத்தைப்
பார்த்துச்சொல்லவேனோ

அநுபல்லவி.

பார்த்துச்சொல்வேன் வெகுசோத்தியதானவே
பாரிலெல்லோரும்பார்த்துமிகவுமெச்ச (பார்த்)

சித்திரைமாதம்பதினோராந்தேதியில்
உத்திரநக்ஷத்திரம் அவாதசியின்னுமும் (பார்த்)

சுக்கிரவாரமுதித் தேழுநாழிகைக்குமேல்
லக்கினமதிதுலாயோகம நல்லாயிருக்குது (பார்த்)

இக்கபதினத்தி விசையாய்மணமும்பட்டம்
சிக்கனமகிழ்வாய்ச்செய்தால் ஜெயமும்புகழுமுண்டு (பார்த்)

தோணிராஜன்-இபதை.

வாசமாய்மணமுஞ்செய்ய மன்னவன்தேசிங்குக்கு
நேசமாய்ப்பணிகள்பூண்டுகொண்டுடனேயிப்போ
காசினியோர்கள்போற்றக் கண்மணிபாலன்தன்னை
பாசமாயழைத்துவாராய் பதியில்வாழ்கட்டியக்காரா

வசனம்.

அகோவாரும்பிள்ளாய் கட்டியக்காரா என்புத்திரனாகிய தேசிங்குராஜனைமணஞ்செய்கிறதற்காக அதிசீக்கிரமாயழைத்துவாரும் பிள்ளாய் கட்டியக்காரா.

கட்டியகன்-வசனம்.

அப்படியே யழைத்துவருகிறேனையா சுவாமி.

பொது-இபதை.

அருகில்கட்டியக்காரன்கூற ஆவலுட்டனேகனிச
வரிசையாய்க்குடைநிழற்ற மாதர்கள்கட்டியமோத
அரிதமாய்க்கர்ப்பூர ஆரத்திகளுமிகமுழங்கத்
திரைகடலொலிபோலத் தேசிங்குராஜன்வந்தானே

வசனம்.

அதோ அப்படியென்று தேசிங்குமஹாராஜனானவன் கட்டியக்காரன்கூற ஆலவட்டங்கள் வீச மாதர்கள் கட்டியமாட அனேகவாத்தியங்கள் முழங்கச் சகல ஆடம்பரத்துடன் சபைக்கு வருகிறவிதங்காண்க.

தேசிங்குமஹாராஜன்வருகிற-தரு-இ-ம்-சருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

ராசராஜனிபுரன்பரமேசன்தேசிங்குமஹாராஜனிதோவந்தான்
அதிவடி விசுருண மதவிலு மழவிய ராஜனிதோவந்தான்

அநுபல்லவி.

நேசம்புகழ்செஞ்சியிற் பாசமுடனமர்ந்து
கேசவபதத்தவனைப்பூசைபுரியுமஹா (ராச)

சரணங்கள்.

சிரசில்நவரத்ன மின்முத்தாரிகைப்பாகை
ஜெகமெங்கும்பளபளென்ன — மார்பிலுமுந்
தாளமருந்திவ்விய ரத்னப்பதக்கமாரம்
தன்னிழல்தளதளென்ன — இந்திரயிரும்
அரையிற்சல்லடங்கச்சைசரிகைப்பட்டமுஞ்சமு
தாயிகள்மிகமிகமின்ன — உலவிடுதென்ன
ராஜர்மனங்கள் திடுக்கிடும்படிக்கையிலுபா
எழிபடைதளதளென்ன
சகலைக்ய தாகவே-வெங்களுக்குத்தெரியலர்
கலகியேயிசைதிசை-யலங்கியேயோடிவிட
ஆதிருதல்வேதமதை-சாதகமாயோதிநல்ல
சோதிரூபாதமதை-நீதியுடனிதுசெய்து (ராச)

தேசிங்குராஜன்-இிபதை.

தங்கையேபோற்றியெந்தன் சகலமஹர் தமக்குப்பின்னும்
வந்தசேரணிராஜேந்திர பதிருடைமைதாளபோற்றி
மைந்தனைவரவழைத்த வந்தக்கிரியைனனமென்ன
சிந்தையில்மகிழ்ந்தகாவேனை சீக்கிரஞ்செப்புமிரே

வசனம்.

சரணஞ்சரணம் என்னையழைப்பித்தகாரியத்தைத் தெரியச்சொல்லும் மகாபிதாவே.



தேரணிராஜன்வசனம்.

அதோவாரும் என்புத்திரனான தேசிங்குமஹாராஜனே நீ சகலராஜ்யத்தையும் ஏற்றுக்கொண்டு பட்டத்திலிருந்து அரசாண்டிருப்பாயப்பா என் கண்மணியே.

இதுவுமது-வசனம்.

அதோவாரும்பிள்ளாய் கட்டியக்காரா நம்முடைய இராயசக்காரனை யதிசீக்கிரத்தில் அழைப்பியும்பிள்ளாய் கட்டியக்காரா.

கட்டியன்-வசனம்.

அப்படியேயழைப்பிக்கிறேனையாசுவாமி.

இராயசக்காரன்வருகிற-தரு-இ-ம-சவுராஷ்டிகம்-தாளம்-ஆதி.

பல்லவி.

இராயசக்காரன்வந்தான் — கணக்கெழுதும்
இராயசக்காரன்வந்தான்

அநுபல்லவி.

இராயசக்காரன்சாமிதேரணிராசன்
கூறும்வசனங்கேட்டு குறிப்புகள்தொகையெழுதும் (இரா)

சரணங்கள்

காதில்கடுக்கனிட்டு கழுத்தில்சரமணிந்து
மாதிகலேயிற்பாகை பாகுடன்தரித்துக்கொண்டு (இரா)
எதிதிசையுமிப்புகழும்ராசன் சத்தியமுறவாகபோஜன்
சித்தமிகவுராஜன் சொற்படிகணக்கெழுதும் (இரா)

இராயசக்காரன்-வசனம்.

சரணஞ்சரணமையாசுவாமி என்னையழைப்பித்தகாரியம் இன்னதென்று தெரியச்சொல்லுமையா சுவாமி.

தேரணிராசன்-இிபதை.

எங்கள்சொல்தவறாத ராயசக்காரனேனாய
முந்திவெகுகணக்கு முகூர்த்தமேசெய்பவனும்
சொந்தமாயவன்திலுசோக்கு துரைசகுமன்னராஜரோ
இந்தகிருதணம்மகாண வெழுதிடுவதற்குள்தானே

வசனம்.

அதோவாரும்பிள்ளாய்இராயசக்காரா செஞ்சிப்பட்டணத்தைச்சேர்ந்தநாலு தாக்குடிதுரைமார்களும் இன்னஞ்சகலரும்வரும்படியாகவோலை யெழுதியனுப்பிவையும் பிள்ளாய்.

இராயசக்காரன்-வசனம்.

அப்படியே நல்லதையா-சுவாமி.

ஓலையின்வகைகள்-வசனம்.

ஸ்ரீமது ராஜபூஜித ராஜமார்த்தாண்ட ராஜகுலபோகன் ராஜகுபேரன் ராஜவெயபிரன் ராஜகோலாகலன் தேரணிமஹாராஜன் தன்புத்திரன்

இப்தேசிங்குமஹாராஜனுக்குநாளைபசுக்கிர வாரத்தினம்கலியாணமும்ப ட்டாபிஷேகமும நடக்கப்போகிறபடியால் சகலரும வரவேண்டியது.

தோணிராசன்-வசனம்.

அகோவாரும்பிள்ளாய் கட்டியக்கார சகலமானஜெனங்களும் வ ந்திருக்கிறபடியால் கலியாணப்பெண்ணுகிய இராணியைய நிசிக்கிரம் அ ழைப்பியும்பிள்ளாய் கட்டியக்கார.

கலியாணப்பெண்வருகிற-தரு-இ-ஈ-சங்கராபரணம்-தாளம்-ஆதி.

பல்லவி.

அதிவிதராணிவந்தாள் சிங்காரமாக
அதிவிதராணிவந்தாள்

அநுபல்லவி.

அதிவிதருணிவந்தாள்நவநிதிபாகவே
சதளிர்பூரணன்போல்சீரொளிப்பூசவே (அதி)

சரணங்கள்.

மெய்யில்பணிபூலங்கக்கைகயில்வளை அலங்கத்
தையல்ரசசியங்களபயவேயுரைத்துவர (அதி)
மின்னலிடையாள்வஞ்சி அன்னநடையாள்கொஞ்சி
மன்னவன்தனைக்கண்டஞ்சி மாமனமும்பொங்கி (அதி)

தோணிராசன்-திபதை.

வந்தகோர்ராணிதன்னை மணவனைதனிலேதானே
இதமிட்சணந்தில்கன்று பலங்கிடவனேவோர்ப்போற்ற
சுந்தரமானவெந்தன்சுதன் தனையழைத்திப்போது
முகதவேபாணிகிராணம்முடிக்கவேவேணுமையா

வசனம்.

வாருமையா பிராமணர்களே இக்கவேளையில் என அ தேசிங்கு மாராசனுக்கு அதிசிக்கிரந்தில் விவாகநடத்தவேணும் சுவாமிகளே.

தேசிங்குராசனுக்குக்கலியாணஞ்செய்த-அகவல்.

பேர்பெற்றசெஞ்சியில் பிரமைதாகப்
பச்சைப்பந்தல் பாங்குடன்போட்டுப்
பாலிகைமுளையும் பதிக்கவிளக்கும
காலுக்காரமும சகலமும்வைத்துப்
பிள்ளையர்பெண்ணையும் பிரியமாயழைத்து
மேளவாத்தியங்கள்மிகவுமுழக்க
வைதிகர்காளகள் சுளிப்புடன்கட்டி
அன்னையும்பிதாவுமன்புடன்கூடி



தாரைநீர்வார்த்துத் தக்கநேரு
உத்தமப்பிராமணர் ஓமமளர்த்த
தெரியலர்போற்றுந் தேசிங்குராசன்
மாதுதன்கழுத்தில் மங்கிலியஞ்சூட்ட
சேனைமந்திரிகள் சிறப்புடனிட்டு
ஆலாத்திசுற்ற வினைவருமறிய
பட்டமுங்கட்டிப் பண்புடனப்போ
போசனமுண்டு புகழுடனிருந்தார்

௫. வசனம்.

அகோதெப்படியென்றால் இவ்விதமாகத்தேசிங்குமகாராசனுக்கு க் கலியாணமுஞ்செய்து பட்டமுங்கட்டிப் போசனமுண்டு சகலருமா யிருக்குந் தருணத்தில் பிராமணஸ்திரீகள் வந்து சோபனப்பாட்டு ப் பாடுகிறவிதங்காண்க.

சோபனப்பாட்டு.

சோபனமடிசோபனமே சுபசோபனந்தமிழ்ப்பாட

அச்சகப்பெண்கள்சோபனமே ஆலாத்திபெண்கள்சோபனமே
முத்துப்பெண்கள்சோபனமே மோகனப்பெண்கள்சோபனமே

சுத்திசைபுகழ்தோணிராசன் பத்தியதாகவேதன்மகனுக்கு
வெற்றிபொருந்தபட்டமுங்கட்டி வேணதருமங்கள்செய்கிறாரடி

சித்துகள்செய்யாதேனாடிக்கப்பி எத்துகள்செய்யாதேயடிகுப்பி
பத்தியதாகவேவாடிநீசேவி பாக்கியந்தருவார்வாங்கிவருவோம்

தோணிராசன்-வசனம்.

அகோவாரும் பிள்ளாய் கட்டியக்கார இந்தப்பிராமணஸ்திரீகளு க்கும் இவ்வூருள்ள ஏழை பரதேசிகளுக்கும் ஆடைமுதலானவைகளை கொடுத்து அனுப்பிவையும் பிள்ளாய் அப்படியேயனுப்பி வைக்கிறே னையாசுவாமி.

பொது-திபதை.

காரிகைமாராணிகன்னை கனமணிதேசிங்குக்கிந்த
பாரினிற்புகழ்ப்பட்டம் பாங்குடன்தந்தராசன்
வீரியமகன்மனதுக் கியைவுறுந்தெளிவுநீக
தாரணிதிலமைக்கை சாதிப்பார்போதிப்பாரே

ரு.

வசனம்.

தோணிராசனானவன் தமதுமைந்தன் தேசிங்குராசனுக்கு ம ... யானைஞ்செய்து பட்டஞ்சூட்டித் தாரணியில் நீதிவழுவாமலிருக்கப் புத்திசொல்லுகிற விதங்காண்க.

தேசிங்குராசனுக்குத்-தோணிராசன்-புத்திசொல்-தரு-இ-ப்

மத்தியமாவதி-தாளம்-ஆதி-கண்ணிகள்.

அரசுசெய்யுமுறிமைதெரியச் சொல்லுகிறேனுந்தன்
  அறிவால்கேட்டுணர்ந்துகொள்ளுமா — என்மகனே

செங்கண்மால்ரங்கர்பாதமதனைத் துதிசெய்து
  செங்கோல்செலுத்துமப்பா — கண்மணியே

சங்கரனுமையாள்பாதமெப்போதுமேமனதில்வைத்து
  இந்தவரசையாள்வாய் — என்மகனே

செங்கோல்செலுத்துமரசர் மூன்கோபம்வைக்கொணாது
  தேசிங்குகேளுமப்பா — கண்மணியே

வஞ்சம்வைத்தொருவரைக் கருவைத்தடியாதே
  வாழுவன்வேண்டாமப்பா — என்மகனே

பொங்கமாய்மகிழ்ந்தாலும் எல்லோருஞ்சரியாகப்
  பொறுத்தாளவேணும்ப்பா — கண்மணியே

செந்தமிழ்க்கவிவாணர்பைந்தமிழோதினாலும்
  செவியாரக்கேளுமப்பா — என்மகனே

மந்திரிமொழியும்வார்த்தைதந்தைமொழியாவெண்ணி
  மனுநீதிசெய்யுமப்பா — கண்மணியே

அந்தணர்பெரியோரைக்கண்டவுடனேநீயும்
  ஆசாரஞ்செய்யுமப்பா — என்மகனே

தன் தாரமல்லாதபிறர்தாரந்தன்னையுந்தன்
  தாயபோலவெண்ணுமப்பா — கண்மணியே

தன்னையேகொல்லவந்த காரம்பகவாகிலும்
  சங்கரிக்கவேணுமப்பா — என்மகனே

ஆலயங்களுமன்னதானங்களும்விளக்க
  அரிவையவீண்யுமப்பா — கண்மணியே

இந்தவிதமாய்நீநடந்தால்ராசாக்களுக்கு
  என்றும்வாழ்வேபகிக்கும் — என்மகனே

தோணிராசன்-இயதை.

என்னிடமகனேகேளாய்இவ்விதமாகயானும்
சொன்னதோர்மொழிதனைநீயும் சூட்சமமாய்மனதில்வைத்து



அன்னைதாய்போற்றினங்க அஷ்டதிக்குள்ளோர்போற்ற
இந்நிலம்செங்கோலாச்சிய மெய்போதமாருவாயே

வசனம்

அயோவாரும்தேசிங்குராசனே நான்சொன்ன நீதிதவறாமல் தந்தைதாயார்பெயர்விளங்கும்படியாக அரசாட்சிசெய்வாயப்பா மகனே

பொது-கொச்சகம்.

நத்தியுடன்ராணியர்க்குப் பன்னிரண்டுதன்வயதில்
புத்திரதீதனிகம் போற்றவேராசனுந்தான்
சித்தமகிழ்ந்து தேன்மொழியாள்தாதியர்க்கு
மெத்தவேபூஷணங்கள் வெகுதனிதந்தனரே

வசனம்

அகோதேப்படியென்றால் தேசிங்குராசனுடையமனைவியான ராணியானவள் பனிரண்டுவயதில் சக்கிரவாரத்தில் புத்திரபுஷ்பவதி என்று கண்டதாதிமார்கள் அரசனுக்குச்சொல்லத் தோணிமகாராசன் அதிசயமகிழ்ச்சிகொண்டு தாதிமார்களுக்கு வெகுமதிசெய்தனுப்பிவிட்டுக் கட்டியக்காரனையழைத்துச் சொல்லுகிறவிதங்காண்க.

தோணிராசன்-இயதை.

பையவேகட்டியக்காரா பாங்குடனீயுமிப்போ
தையலாள்ராணியின்று தனிப்பருவமானதென்று
அய்யர்வேதியர்களிப்போ தான்மனைவருவதாக
உய்யவேயழைத்துநீயு மோடியேவருகுவாயே

வசனம்

அகோவாரும்பின்னாய் கட்டியக்காரா மருமகளாகிய ராணியம்மாள் பருவகாலமானதென்றுசொல்லி ரங்காதசாஸ்திரியை யழைத்துவாரும் பின்னாய் கட்டியக்காரா

கட்டியக்காரன்-வசனம்.

அப்படியேயழைத்துவருகிறேன்ராசாவே

இரங்காதசாஸ்திரி-வசனம்,

தனதானியம் பசுபுத்திரலாபம் தீர்க்காயுசுவுண்டாகட்டும் சுவாமி தோணிமகாராசனே யென்னையழைப்பித்தகாரியந் தெரியச்சொல்லும் ராசனே

தோணிராசன்-இயதை.

அய்யரேசாஸ்திரிப்போ அரண்மனைதன்னில்வாழும்
தையலாள்ராணிதானும் தனிப்பருவமானாளிப்போ
உய்யவேசுக்கிரவாரமதில்சாஸ்திரந்தனை
மெய்யேதிட்டமதாகப் பார்த்துச்சொல்லுவாயே

வசனம்

அகோவாரும் சங்கீத சாஸ்திரியே சரணம் சரணம் என்மருமகளாகிய ராணியம்மாள் இன்றையதினம் புஷ்பவதியானவளாகையால் நட்சத்திரம் நாளெப்படி யிருக்கிறதோபார்த்துச்சொல் லுமையாசுவாமி.

இராங்கதசாஸ்திரியார்-தரு-இ-ம-கல்யாணி-அடதாளம்.

சொல்லுவேன்கேளீர்சாஸ்திரம்பார்த்துச்
சொல்லுவேன்கேளீர்

சொல்லுவேன்கேள்வெகு வல்லமையாகவே
வல்லசாஸ்திரத்தைவகையுடன்விரித்து (சொல்)

சாஸ்திரம்சொல்லவே சேர்த்தபலகைப்
பார்த்துக்கணக்காக்கிச் சேர்த்துப்பிரித்துநான் (சொல்)

கட்டில்பெருக்கி யிருப்பதுகண்டு
மிச்சமாயிவ்வமிருக்கதொகைதனைச் (சொல்)

ஸ்ரீராணியாருக்கு விளங்கினசாஸ்திரம்
ஆறுமாதத்திற்குவாகாய்தேர்ந்தோது (சொல்)

வெற்றிகொண்டாடவிளங்குஞ்சாஸ்திரம்
சத்தியவுசித்தியங்கள் தானவெகுவிஸ்தாரம் (சொல்

வசனம்.

கேளுமையாதோணிமகாராசனே ராணியம்மாள் ருதுவானநட்சத்திரம்பார்க்கும்போது ஆறுமாதத்திற்குப் புருஷன்முகம்பார்க்கப் போகாது உபுத்திரங்களதிகமாயிருக்கிறது நானதுவரைக்கும் சொல்லிப்போய்வருகிறேன் தோணிமகாராசனே.

தோணிமகாராசன்-வசனம்.

ஆனால் போய் வாரும் ஐயா சுவாமி.

தேசிங்குராசன்-விருத்தம்.

தோணிராசன்தானும் சென்றபின் தேசிங்குராசன்
குதிரைமேல்வந்தானையிப்போ குலங்கவென்சபையில்முன்னே
தோகாப்பணிகள்பூண்டு மிகுந்திலுட்டியக்காரா
வீரனேயழைத்துவாராய் விளம்புவேன்சேதிதானே

வசனம்.

அகோவாரும்பிள்ளாய் கட்டியக்காரா வழுதாவூரிலிருக்கும் என் சினேகிதனை மோவுத்கான்சாயபை யதிசீக்கிரத்தில் அழைத்துவாரும்பிள்ளாய் கட்டியக்காரா.



கட்டியக்-கவி.

மார்வெண்றேறும்-யானையிப்போ
சேருமழைத்துச்-சிருட்ஷ்வருவேன்

கட்டியக்கன்-விருத்தம்.

சலாம்சலாம் வழுதாவூரில் சார்வதாகமாயாளும்
சலாம்சலாம்மோவுத்கான் சாயபே பார்மையிப்பொ
சலாம்சலாம் செஞ்சிராஜும்பம் தனியரசாருமன்னன்
சலாம்சலாம்மொருவனாடிக்கருள் சபைதனில்வரச்சொன்னாரே

வசனம்.

சலாம் சலாம் மோவுத்கான்சாயபே தேசிங்குமகாராசர் உம்மைத்தமதுமொழுவுக்கு அதிசீக்கிரமாய் அழைத்துவரச்சொன்னார் வாரும் சலாம் சலாம்

மோவுத்கான்-விருத்தம்.

உன்னியமோவுத்கான்தானும் வொயிலுடன்பணிகள்பூண்டு
செய்மையாய்கதிரோலா இருக்கையில்விளங்கவேதான்
அன்னையாருக்செக்குசியாரும் அரசனைக்காணவென்று
மன்னியசபைபோய்போற்றப் பாங்குடன்வருகின்றானே
மோவுத்கான்வருகிற-தரு-இ-ம-புன்னாகவராளி-தாளம்-ஆதி.

பல்லவி

மோவுத்கானும்வந்தான் முசல்மானான
மோவுத்கானும்வந்தான்

அநுபல்லவி

அரசான் அல்லாவைவிதித்துப் அனுதினம்நமாஸ்செய்து
வசமாய்ச்சருக்கியையாருபாசமாய் தேசிங்கைக்காண (மோ)

சரணங்கள்

திங்களுதயம்போலக் கிரகிணிதபாவையும்
அங்கிதுருட்ன் அணையின்ஞராஜருடன்
தங்களொசமானன தனித்தேசிங்கைக்காண
பொங்குமனமகிழ்ந்து புவியுள்ளோரமெய்சவே (மோ)

அல்லாருதல்லாவென்று அங்கிக்காலிங்கரிதனி
சல்லாபகாசுடாயீரா சாயவைமகளில்போதனி
வல்லாமைநாயில்வெகுசி மாசீன தன்னையேயழைத்தி
நடலைச்சமானன நீருக்கு சலாமுஞ்செய்து (மோ)

மோவுத்கான்-விருத்தம்.

என்னையேயழைத்தசேதி யென்னகாரணமென்றியாரும்
மன்னவராசர்கோவே மனமகிழ்ந்ததுடியேனுக்கு

இன்னவாறென்று சொல்ல வெகுதுக்கரிப்பிதேய
அண்ணலே யருளையையா வன்புடன் சொல்லுந்தெய்வநேயே

வசனம்.

அசேவாரும் தேசிங்குமகாராசனே யென்னையழுந்த வாசிம் அருளிச்செய்யவேணும் மகாராசனே சலாம்.

தேசிங்குராசன் - வசனம்

அசேவாரும் மன்றிசேஷிதனுன மோவுத்கான்சாயபே உன்னை வனழுதத்தகாரியமா சொல்லுமிரும் இந்தச்சிபமாதனத்தி லுட்காரும் மோவுத்கான்சாயபே.

இதுவுமது.

அசேவாரும் கட்டியக்கார என்றிசேஷிதனுன மோவுத்கான்சாயபுக்கு ஆட்டப்பாட்டல் காண்பிக்கவேணுமென ஆனையால் கட்டியப்பென்கனை மதிசிகிரமமயழைத்துவாரும் பிணைவாய் கட்டியக்கார

கட்டியன் - வசனம்.

அப்படியேயழைப்பிக்கிறேனையா சுவாமி

கட்டியப்பென்னவள் தொம்பியாடுகிற - தரு - இ-ம் - பந்துவராளி

தாளம் - திரிபுடை.

தும்பியடி யென்கன் தும்பியடி - குருபாதகமலங்களை வேண்டி தும்பியடி
கண்மயாருந்தேசிங்குராசனை காடிக்கும்பியடியக்கடி.

முத்துவைரமணிமாலையுடன் மோகனமாலைகளென்ன
பெருநிலையுடபுகழ்பெற்றவிலதாமிசைசத்துருமபியடியக்கடி.

மன்றிமார்க்குமோவுத்கான்சாயபுமன்னர்வினாரு மண்டபத்தில்
சந்தானமுந்தேசிங்குராசனைக்குழுவ அருமபியடியக்கடி.

மத்தினியுந்தமிரணியுடன் மதிமுசெருவியாபமரும்
சித்தமடிழுமுர்த்திலெசர்த்தர்தனைமுக்கிடகோக்குரும்பியடியக்கடி

தேசிங்குராசன் - விருத்தம்.
(ரூணி) திரையவாங்கிவிடும் செரிசனம் நான்கா ணா பிராணநாதா இப்போ ஆசைசுகணமபார்த்துன்னை அனுப்பிவைப்பேனையா பிராணநாதா

(தேசி) ஆகாதநாள்தனில் ஆளாகிறுயென்தன் பெண்ணே ரூணி இப்போ, அதுகுற்றமாகுமே யெதிர்வரலாகாதே பெண்ணேரூணி

(ரூணி) சையோகமாகவே கையைவிட்டுமையா, பிராணநாதா நான், ஜீ விழியால்கண்டுமன்னைகைவிடைதாரேன் பிராணநாதா

(தேசி) ஆறுமினைகப்பாருமழகுள்ளகைதன்னை பெண்ணே ரூணி எனக்கு, அடைக்காய்மிககொடுத்து அனுப்பிவைப்பாயடி பெண்ணேரூணி

(ரூணி) அய்யோயித்தகைக வழகாயிருக்குதே பிராணநாதா உன், மெய்யழகைக்கண்டால் வெய்யவன்போலாமே பிராணநாதா

(தேசி) போதுமகையைவிடும் புதுமைகள் பேசாய் பெண்ணே ரூணி - நீ, வாதுபேசவேண்டாம் வந்தவழியைப்பாரும் பெண்ணேரூணி

(ராணி) அடைக்காய்வெள்ளிலைகொடுத்தம் அருளினேன் வாங்கிக்கொள்ளும் பிராணநாதா - என்னை, முடிக்கச்சிறையில்வைத்து நடக்க லாகுமோசுவாமி பிராணநாதா

(தேசி) கையைவிடாய்பெண்ணே வைபவேதும்புராய் பெண்ணேரா ணி - கம்கு, வைபவக்காலம்வரும் ஐயம்வேண்டாமடி பெ ண்ணேராணி

பொது-த்விபதை.

கைதனைப்பிடிக்கராசன் கடிந்தசொல்லுரைக்கும்போது
தையலாள்ராணிதானும் தனதனைக்கிறுக்கிக்கொண்டு
அய்யனேசெகதியின்வாறு அறிகிலேன்ரங்காவென்று
பையவேதாதியோடு பாக்குடன்யேகிறாளே

வசனம்.

அதெப்படியென்றால் ராணியானவள் தேசிங்குராசனுக்குத் தாம்பூலம் கொடுத்து அனேக வார்த்தைகள்சொல்ல அதுகளை யெல் லாந்தள்ளி ராணியை யனுப்பிவிட்டு தான் இரங்கநாதர் கோவிலுக்குவ ருகிற விதங்காண்க.

இதுவுமது-த்விபதை.

கீர்த்தியாய்ப்புகழ்க்குராசன் கிளர்ந்துவாகைசூடிநிற்க
பார்த்திபோதேசிங்குராசன் பதரிவேபோராமென்று
நாற்றிசைபுகழும்ரங்க நாயகர்அலமேலுகூட
வாழ்த்தியேகருடனேறி வந்துமுன்தோன்றினரே

ஸ்ரீரங்கநாதர் வருகிற-தரு-இ-ம்-சாவேரி-தாளம்-திரிபுடை.

வருகிறாரிதோபாரீர் ஸ்ரீரங்கநாதர்
வருகிறாரிதோபாரீர்

மச்சக்கூர்மவதாரர்பட்சிவாகனருடன்
அட்சயமாய்ராசனுக்குமெச்சிநாம்சொல்வோமென்று (வரு)
மந்திரிவனைப்போலே எத்திசையுங்கண்டதில்லை
வைத்தாசிவனைபிவி வைகுண்டந்தானில்லை
சத்துருவினைவைத்து யிருக்கதாமசமில்லை
வெற்றியாய்த்திரும்பும்போது முத்தியாயவரமளிக்க (வரு)

பொது-த்விபதை.

வருகிறரங்கர்தன்னை வள்ளல்தேசிங்குகண்டு
சிரசின்மேல்கரத்தைக்கூப்பிச் சீக்கிரங்கொண்டுவிட்டு
ஹரிஹரிமுகுந்தாவிந்த அடியனைக்காருமென்று
கருதியேமனதுதன்னில் களிப்புடன்துதிசெய்வானே

வசனம்.

அகோகேளும் சபையோர்களே வருகிற ரங்கநாதனை தேசிங்கு ராசன்கண்டு இரண்டுகைகளையும் சிரசின்பேரில் கூப்பி துதிசெய்கிற விதங்காண்க.



{ தேசிங்குராசன் ஸ்ரீரங்கநாதனைத்தொழுதல் }
{ தரு-இ-ம்-கலியாணி-தாளம்-திரிபுடை }

கருணைபாரிக்கவேளை ஸ்ரீரங்கநாதா
கண்பாருமிந்தவேளை

ஹரிஹரிரங்கநாதா ஹரிவாசுதேவாமுகுந்தா
பரிவுடனென்னைக்காப்பாய்பரப்பிரமசொரூபா (கரு)

அருசாய்சபாப்புசண்டை ஆரிதமாய்ச்செய்யவேவந்தான்
விருதாவாய்யென்னைரங்கா வீணில்கொல்லவேவேண்டாம்
செயமாய்யெனக்குசக்தி தருவாயின்றைக்குவெற்றி
சயமாய்வருகசக்தி தாருமுன்னைப்பணிவேன்பக்தி (கரு)

இதுவுமது-வேறு-தரு-இ-ம்-பியால்-தாளம்-ஆதி-கண்ணிகள்.

அய்யனேயுங்களிட அடிகளைபோற்றினேன்ரங்கநாதா யிப்போ
சையோகமாய்ப்பாதமதான்கண்டதேபோதும்ரங்கநாதா

எந்தன்கைபலம்பார்த்து யிகதனம்வரமருளும்ரங்கநாதா நீர்
மைந்தனென்றனைக்காரும்வைகுண்டபதியோனேரங்கநாதா

வெய்யவன்தனைவென்றமேன்மையைப்பெறுவேனோரங்கநாதா நான்
செய்யுந்தவத்தாலுன் சீர்பாதங்கண்டேனேரங்கநாதா

பாலன்பிரகலாதனுக்கு பக்திமிகவளித்தாய்ரங்கநாதா என்னை
நடைமுகத்தில்காட்டி கொடுக்காதிருக்கவேணும்ரங்கநாதா

மைவிழிஅலமேலுமங்கைசமேதரேரங்கநாதா உந்தன்
வைகுண்டபதவியைவரமெனக்கருளுவீர்ரங்கநாதா

வசனம்.

அகிலாண்டகோடி பிர்ம்மாண்ட நாயகா - ஆதிமத்தியாந்தரகிதா-புண்டரீகா-புருஷோத்தமா-வாரணா-வாசுதேவா- ஸ்ரீரங்கநாதா-சுவாமி அடியேன் செனமசாபல்யமானேன் இந்தபூலோகத்தில் கீர்த்தியை நிலைநிறுத்தி மோட்சத்தைக்கொடுத்து ரட்சியுமையா சுவாமி.

ஸ்ரீரங்கநாதர்-த்விபதை.

செஞ்சியைவேண்டாமென்றால்சிரசேயின்றேவேண்டாம்
அஞ்சியேயானைபோனால் அருளிர்கொஞ்சகாலம்
மிஞ்சியேபோவையாகில் மீளுவதரிதேயப்பா
கொஞ்சியேமகனேசொன்னேன் கொலுவிற்குடன்றிடாதே

வசனம்.

அகோவாரும் தேசிங்குபாலகனே செஞ்சியை வேண்டாமென்று இன்றைக்குயுத்தத்திற்குப்போவையாகில் மீண்டுவரப்போகிறதில்லை நாளைதினம்போவையாகில் இன்னமகொஞ்சகாலம் செஞ்சியை யரசாண்டு பிறகு நாமுடைய பதவிசேருவாய் ஆகையால் நீ கொலுவிற்குப்போவாயப்பா தேசிங்குபாலகனே.

தேசிங்குராசன்-த்விபதை.

அய்யனே போற்றி போற்றி ஆதிவராகனே போற்றி
மெய்யனே போற்றி போற்றி ஸ்ரீரங்கநாதா போற்றி
உய்ய உன் பாதத்தினை உகந்து நான் கண்டபோதே
வையமேல் உயர்த்தியத்ம செய்ய மாக்குடன் இன்றே போவேன்

வசனம்.

ஹரிஹரி வராகநாதரே என்பேரில் இவ்வளவு கோபம் வைக்கவேண்டாம்-நான் யுத்தத்திற்குப் பயந்தவனல்லவே தாங்களிப்படி சொல்லவேண்டியது தங்களுடைய பாதாரவிந்தத்தைக் கண்டபோதே எனக்கு யாதொரு பயமுமில்லை ஆகையால் நான் இன்றைக்கே யுத்தத்திற்குப் போகிறேனையா சுவாமி.

ஸ்ரீரங்கநாதர்-வசனம்.

ஆனால் அப்படியே போய்வருவாயப்பா தேசிங்குபாலகனே

பொது-த்விபதை.

ஆதிராமரங்கர்பாதம் அரசனுங்கண்டு போற்றி
கோயிலை வலமும் வந்து கொடிய சேனைகளைக் கூட்டி
நீலவானமாம் புவியில் நெடிய போர் செய்யவேண்டி
நீலமாம் பரிமேலேறிச் சென்றதை யுரை செய்வோமே

வசனம்.

அதோ தெப்படியென்றால் தேசிங்குமஹாராசன் ஸ்ரீரங்கநாதனைக் கண்டு தெரிசித்து வேண்டிய வரங்களைப் பெற்றுக்கொண்டு தனது சேனைகளைக் கூட்டிக்கொண்டு போவதற்காகவுடன் தான் ஆற்காடு நபாப்பு பேரில் யுத்தத்திற்கு வரப்போகிறதை இனிமேல் சொல்லுவோம் சபையோர்களே.

௨

## இரண்டாம்பிரிவு.

கணபதி துணை-வெண்பா.

சக்தி சிந்தும்போத மிருந்தி புராக்ஸாண் போல் வெற்றி நிகும்
அத்தி சிந்துங்கண் ணுப்பச் செல்வ திகழ் — சதி தரும்
செந்திசைகள் வாழும் செல்வ விநாயகனின்
தஞ்சமென்று யான் பணிந்தேன் தான்

பொது-த்விபதை.

அத்திமாமுகத்தேயன் கந்தன் ஆன ஹரி அடகன் தம்பனை
பத்தியுடனே பணிந்து பார்பிசையாறு ஆக்கும்



ரத்தன் தேசிங்குராசன் பண்புள்ள நாடகத்தை
இத்தரையுள்ளோர் காண விரும்பு வேளினிங்கனே

தேசிங்குராசன் நபாப்பு பேரில் யுத்தத்திற்கு ஆயத்தஞ்செய்ய

கட்டியக்காரனுக்குச் சொல்-த்விபதை.

ஏங்கனை கண்டிபானும் இங்குசேனாட்டி செற்றேன்
பொங்கமாய்த்தளக்கள் சேனை பூரிதை நாருமேட
சிங்கம் போல் வெல்லக்கு வாய்த்த சேனையை யெக்கன்றானே
அங்கனே கட்டியக்காரா அலங்கவே கொண்டுவாராய்

வசனம்.

அடேகவாரும் பிள்ளாய் கட்டியக்காரா எனது பாராசாரிகுதிரை அலங்கிருதஞ்செய்து அதிசீக்கிரத்தில் கொண்டுவாரும் கட்டியக்காரா.

(க-ம்-வ-ம்) அப்படியே கொண்டு வருகிறேனையா சுவாமி.

பொது-த்விபதை.

வாரமய்ப் பாராசாரி வந்தவன் நபாப்பு மீதில்
போகவும் யத்தஞ்செய்வோம் இனிப்படை வாவென்ன
கோரமாம் பரிபுர பார்த்து நிலத்திலே தலை வணக்கச்சயங்க
வீரனாம் ராசன்தானும் வெகுண்டவனே துசொல்வான்

வசனம்.

தன் முன்னுக்கு வந்த பாராசாரியைப் பார்த்து தேசிங்குராசனானவன் நபாப்பு மீதில் சண்டைக்குப் போவோம் வாவா வென்று சொல்ல அதை பாராசாரிகேட்டு தனக்குச் சாகுங்காலம் சமீபித்ததென்று தெரிந்து தலையைப் பூமியிலிடமாகக் கவிழ்க்க அதைக் கண்டு தேசிங்குராசனானவன் சொல்லுகிறதாவது.

தேசிங்குராசன் சொல்-தரு-இ-ம்-ஆசாவேரி- அடதாளம் கண்ணிகள்.

வாராய் கீர்த்தியே பெற்றோனே பாராசாரி வார்ப்புமாய் நல்ல குணம் தாய் பாராசாரி தன்னை வைத்தாலாகா தென்று பாராசாரி காறுபம்மை வளர்த்தேன் தன்னை வைத்தாலாகா தென்று பாராசாரி கோ துணைமடலே பாராசாரி, கொள்ளு வைத்தாலாகா தென்று பாராசாரி ஆயிரங்கட்டி பச்சைப்புல்லைப் பாராசாரி ஆபரணம் வைத்தே பாராசாரி சாகப்போறேனென்று நீயும் பாராசாரி போட்டுவளர்த்தேனே டாபாராசாரி, ஆறிலே செத்தாலும் சாவு பாராசாரி சாய்ச்சியே நல்ல குணக்காயாராசாரி, நூறிலே செத்தாலும் சாவுபாராசாரி, கட்டிக் கொடுத்தேனே பாராசாரி போருக்கு வேண்டியமான பாராசாரி; போட்டிக்கு இருக்கும் பாராசாரி நடக்கப் போய்மித்தவாபேரா பாராசாரி வெற்றியாய்ச் சென்று போராடி பாராசாரி இப்போ வாக்கொடுத்தவாமோ பாராசாரி, உன் சேட்டை செய்து பாராசாரி விந்தையாய் தம் சேர்ந்து வார்த்தாய் பாராசாரி, ... பாராசாரி யுத்தப்படியே வருவேனோ ...

வருக்கும்ஜென்மவாரம்பாராசாரி விசைக்தகக்கிரவாராமல்லோபாராசாரி, இருவருக்குங்காலம்வந்தால் பாராசாரி விரண்டுபேரன்றுப் முடியுமல் லோபாராசாரி, நீயிறந்துபோனிருந்தேன் பாராசாரி நிச்சயமாய்ச்சொன் னேனிப்போபாராசாரி

பொருந்து-இபதை.

அந்தசொற்கேட்டு பாராசாரியும்கைகூப்பித்தானும்
முந்தநேவையடியெடுத்து முன்னமையாய்ப்படக்குப்போனது
விந்தையாய்வெள்ளிசாமை விளங்கவேமைசுற்றிப்புட்டி
சிந்தனையென்னவேண்டாம் திருப்புவாய்ச்சாமியவனருள்

வசனம்.

இவ்விதமாய் தேசிங்குராசன்சொல்லிய வசனத்தைப் பாராசாரி கேட்டு அதிகசந்தோஷித்தானென்று முன்னுக்காயுட்டதை அப்போது தேசிங்குமஹாராசன் பாராசாரிக்கு பொன்னிறைந்து வெள்ளிறைந்து கடை வாளமுதல் சகலஆபரணங்களுங்கொடுத்து யுத்தத்திற்குப்போவோமென் று சொல்லி பிறகு மோவுத்துகானைப் பார்த்துச் சொல்லுகிற விதங் காண்க.

தேசிங்குராசன்-இபதை.

மங்கிலிமுகாவூர்க்கு மன்னன்மோவுத்கான்சாயபே
விந்தையாயுனை அகிலவேணியலங்கரித்து
அந்தமாயுன ஆகையின் ஆயுதமெடுத்துக்கொண்டு
வந்திடுமசமாக்குகாமும் வரிசையாய்யருவோமே

வசனம்.

அகோசேனும் மோவுத்துகான்சாயபே உம்முடைய ஆயுதமெடு த்துக்கொண்டு கிலேவணியையலங்கரித்து அதன்மேலேறிக்கொண்டு வாரும் கபர்ப்புடேரில் யுத்தத்திற்குப்போகலாம் மோவுத்கான்சாயபே

(மோ-ன்-வ-ம்) அப்படியேயிதோவந்தேன் தேசிங்குமஹாராசனே.

{ தேசிங்குமஹாராசன் தனது சேனைகளைப்பார்த்துச்
சொல்-தரு-இ-ம்-மோகனப-தாளம-திரிபுடை. }

அண்ணமாரேதம்பிமாரேனுனது அருகில்வாருங்கோமகாரே
மன்னவரேபுங்களுக்குஇப்போ இன்னமொன்றுசொல்வேன்கேளும்
மக்களமனைவிஆசையுள்ளபேர்கள் ஒக்கவேண்டாமிதிலும்
ஆடுமாடுவீடுவாசல் அதன்பேரிலாசையுள்ளார் இங்கேவந்திடும்
அன்னபானமுந்தான்பெரிதென்றிப்போ யெண்ணிருந்திடுங்கள்
இந்தக்சோறுமுன்னேயுத்தத்துக்குமனமிருந்தால் ஒக்கவெங்கூடவாரும்
என்னைப்போல்ஞானத்தையிப்போ இசைந்தவர்கூடவாரும்
இந்தமொழிராசன்சொல்லஅப்போ எதிரேவந்தாரநூர்பேர்கள்
தங்கள்தமக்கள்மரிவுடனேஅப்போதாக்ஷமாய்நின்றார்



பொருந்து-இபதை.

இப்படிராசன்சொல்ல மிருக்கும்சேனைகளில்
ஒப்புடனொக்குநூறுபேர்கள் ஒருமித்துவந்திருக்கையிலே
செப்பமாய் தேசிங்குராஜனவீரன்மோவுத்துகானுங்கூட
தப்பிலாசண்டைக்குப்போகத்தானுமேவருகின்றாரே

வசனம்.

அகோயிதப்படியென்றால் இப்படி தேசிங்குமஹாராஜன்சொல்ல அநேகங்கோடிசேனைகள் செஞ்சிக்கிறாகும் நேருபோக மற்றுமன்னு யருகிறையுடன்மோவுத்துகானுடனும்தேசிங்குமஹாராஜன்சண்டை க்குவருகிறவிதங்காண்க,

தேசிங்குமஹாராசன் சண்டைக்குவருகிற-தரு-இ-ம் பந்துவராளி-அடதாளம்.

சண்டைக்குவருகிறானைய தேசிங்குராஜன்
சண்டைக்குவருகிறானைய

அண்டாண்டபிரண்டமதிரதிசைகலங்க
கண்டவர்களெல்லாம்இவன்சண்டையென்றுமெய்பொங்க

கரிகளும்பரிகளும் இறையுமைபடைகளும்
இடைகடலொலியெழுகுழுமியேவருகுடன் (சண்)

கரிகள்மேல்பரிதுன்ன பரிகள்மேல்கரிதுன்ன
காளான்படைகள்கைவிலகனத்தஆயுதமின்ன
தானைமையசெங்குநாகத்தின்னோவிதனர்க்கு
தானையின்குலமுமிந்கேதலைக்கிடமெங்கேயென

சந்திரசூரியருந்தான் திசைமாறிட
மூக்கியமேரிகொருமுழங்கிட
விந்தையாய்நதர்லெவ்ன சர்மறைதீவிட
சந்நாயன்சேதிகன்கூவிட

வீரவுதாரசெம்போரங்கிரா
சூரன்மகுமலைகிருசெய்யபலேயென்னவே (சண்)

பொருந்து-இபதை.

தாங்கள்தேசிங்குராசன் அடுக்குடன்சிங்கம்போல
அங்காகையிலவர்மேலேறிந்தவன்கபாபுசாயபு
இந்தவன்வாராமலிருக்கவொட்டுகள்தேடுமென்ன
தங்கியதாபுவின்கலிமேறியையவெட்டிவிட்டான்

வசனம்.

அகோஇதப்படியென்றால் தேசிங்குமஹாராசன் அதிகவுக்கிரத் துடன்வருகிறதைகபாபுசாயபுதங்கிவராமலிருக்கும்படியாய்தாழுரா ர்களையுனர்இலைகளின்வரிசையைவெட்டிவிட்டஅதிசமுத்திரம்போல இ றைச்சலிட்டுவருகிற ஆதறை தேசிங்குராசன்கண்டுசொல்லுகிறவிதம் காண்க.

தேசிங்குராஜன்-திபதை.

வாருங்கீர்த்திமணிசிங்கு வாரகோள் ஆறுதல்களீர்
பாருங்கீர்மோவுத்துக்கான்சாயபே ... வொற்றுசேர்வேனு
கூறுங்கீர்வைக்குதுன்றுக்குதிப்புகாரிக்குமிதிரம
சேருவீர்பயணத்தைத்... திவிவைத்துச்செய்வீரே.

வசனம்.

அகோவாருமந்திரிமார்களே மோவுத்கான்சாயபே இதோ ஆறுபு திசாய் இன்றைமயிலாம்வாவேண்டிய தன்மை ஆனாதச்சொல்லிக்கொண்டு அழைக்கிறாய் வாடவுங்கள் ஜல்தி.

மந்திரிமுதலானோர்சொல்-திபதை.

அய்யனேயென்னன்கோவே அடர்ந்திமோற்றின்செய்தி
வெய்யவன்மலைமறுக்கு விளங்கியேபரிதன்னை
பய்யவேவெட்டிவெட்டிமாய்த்துவிட்டதுவு
உய்யவேபயர்ந்துவிசய்தான் உன்னடிதுதானேயா

வசனம்.

கேளுமையா தேசிங்குமஹாராசனே நாம்வருகிற உதட்டிவையகபா ப்புகன்டுபயந்து நாம்வராமல் திருப்படியாய்மலையுமுர் வரிதாழ்னுர்ன மிஞ்சுஇரண்டையும் வெட்டிவிட்டான் அந்ததண்ணீர்பெருகிவந்து ஆயமிதுவைய்க்கவாயி.

தேசிங்குராஜன்-திபதை.

ராய்சிங்குலட்சுமணசிங்கு நயமுள்ளமோவுத்கானும்
மபளசிர்த்தவீரமெனவிட்டபடையேகேளீர்
காரசமில்லாமறுன் ஐறுநிலைத்தறைத்தாண்டி
பூமியும்இர்வதாகப்போர்செய்வேமவருகுவீரே

வசனம்.

ஆ-ஆ-ஆ-என்மனதக்கேற்ற ராய்சிங்கு லட்சுமணசிங்கு இன் னுஞ்சகலமானபடைவீரர்களே சொல்வதைக்கேளுங்கள் நம்இப்போ து இந்த ஆற்றைக்கடந்துகாப்பையென்று இன்றுபகலொண்டுமணிக் குள்ளாக ஆற்காட்டில்வெற்றிக்கொடிநாட்டவேனும்மோவுத்கான் சாயபே (மோவுத்கான்வசனம்) அப்படியேபோவோம்வாரும் மஹா ராஜனே.

பொது-வசனம்.

அக்கசமயத்தில் பரவிவருகிற ஆற்றில் அன்றுவருகிறகுதிரைகளுட ன்இராவிப்போகையில் ஐந்துகுதிரைகளை ஆற்றிலடைந்துக்கொண்டு போகதேசிங்குராஜன்பார்த்து கெல்காட்டுவளியைகொண்டு மனைக்கற்றக் குதிரைகளுடன்கவாதேர்ந்தவுடன் குதிரைகளும்சேனைகளும் தொகை நிறுத்தினவனை.



சேனைகள் ஆற்பரிக்கிற-தரு-இ-ம-சஹானா-தாளம்-ஆதி.

மிகவேவளிகுதிரைகவுமிகோரய்போகுதே
காலைதாக்கிதேசிங்குபார்விகாரணம்போடுதே
சாலவந்தசமையத்தார்சன்தளக்கமீறுதே
ஆலகாலவிஷத்தைப்போல ஆங்கரிக்குதே
மேலேதாள்கள்கம்மிருசியன்வெய்யல்மறைக்குதே
மாலைபுனைத்தமோவுதகன்பரிமன்னன்முன்னோடுதே
பாலாகத்திசையிலெல்லாம்படைகள்சீறுதே
பார்த்தகாப்புசேனைகளப்போகதறிவாடுதே.

மோவுத்துகான்-திபதை.

அய்யனே அரசர்கோவே அருளும்நான் முன்னேயேகி
செய்யுரேன்சன்னடையெந்தன் இராணிவைக்கண்ணில்பாரும்
பையவேசேனையெல்லாம்படிகளமாகக்கொண்டு
உய்யவேகாணும்வாரேன் உறுதியாயனுப்புவீரே

வசனம்.

ரும்-ரும்-சலாம் தேசிங்குமஹாராஜனே நான் முன்னேபோய் காப்புபாளையத்தை சின்னாபின்னமாக்கிவிட்டு நிமிஷத்திற்குள்வருகி றேன் உத்தாவுகொடுத்து அனுப்புமையா தேசிங்குமஹாராஜனே.

தேசிங்குராஜன்-திபதை.

என்னையேயனுப்புமென்று மயிலப்பமாய்சொன்னாய்மன்றை
உன்னையேயனுப்பாயிப்போ உறுதுகேமனதுதானும்
இன்னமும்வயதுகொஞ்சமவெய்படியனுப்புவேன்யான்
மன்னவாபோகொண்டுஅமருக்கேயரிகுவாயே

வசனம்.

அகோசேரும் எனக்குமிருந்தசினேகிதனை மோவுத்துகான்சா யபேஇப்போஉனக்குதினுவ்வயது மேலும்மஞ்சளுடுப்புடன்வந்திரு க்கிறாய் ஆகையால்நீபோகவேண்டாம் நான்போய்வருகிறேன் மோவு த்துகான்சாயபே.

{ மோவுத்கானுக்கும்-தேசிங்குராஜனுக்கும்தர்க்கம் தரு-இ-ம-அடாணா-தாளம்-ஆதி. }

(தேசி) அப்பனேகேழ்க்கவந்தாய்மோவுத்கானே
அனுப்பமனதுவல்லேமோவுத்கானே
(மோ) மனதுவைத்துநீருமவாழ்த்தியனுப்பினையும்
மாபடைவென்றுவாரேன்மன்னவனே
(தேசி) ஆனைகுதிரைகூடி அத்தனைப்படைவென்று
வாளால்வதைப்போமவாரீர்மோவுத்கானே

(மோ) இருவருஞ்சண்டைக்குப்போனுலென்பேரிருக்குமோ
பகருமகல்லவார்த்தைதமன்னவனே

(தேசி) கன்னிமனைப் பிருத்திகங்கணங்கையுடன்போனால்
கண்டவர்கள்ளப்பாரேமோவுத்கானே

(மோ) நானும்நபாப்பைவெல்லுவேனென் அவன்மகளின்
கல்லுவீர்காண்போரேன்மன்னவனே

(தேசி) இன்னஞ்சிறுவயதுசின்னவயதானபோனே
எப்படிப்போறுவேன்மோவுத்கானே

(மோ) பாலன்நபாப்பைவென்றுமேல்வருவேனின்று
சாலவேதொழுதேனாதுமமன்னவனே

(தேசி) ஒண்டியாய்ச்சண்டையில்படையைக்கூட்டி
ஒக்கசண்டைசெய்யுமோவுத்கானே

(மோ) வேண்டாநாள்ஒருவனேவெற்றிபோர்செய்யவேணும்
மாண்டாலும்பேரிருக்குமன்னவனே

(தேசி) பேரிருக்கவேணுமென்றால்போகலாம்மோவுத்கானே
நீயிறந்தால்நானிருக்கேனமோவுத்கானே

பொருநிபந்தை.

அல்லல்லாநாகூர்மீரா அடியேனைக்காப்பாயென்றும்
வல்லமையுடையநபாப்பைவதைப்பனென்பாராயென்றும்
மெல்லவேமோவுத்காநும்விளம்பியேபோகும்போது
நில்லெனதேசிங்குராஜன்நின்றதின்சொல்லுவானே

வசனம்.

மோவுத்காநுனவன் நாகூர்மீரானை தியானஞ்செய்து இந்த நபாப்பைவெற்றிகொடியில் அதஞ்செய்கிறேனென்றுபோகும்போது தேசிங்குராஜனுனவன் மோவுத்துகானையழைத்து சொல்லுகிறவிதங்காண்க.

தேசிங்குராஜன்-நிபந்தை.

என்தனைவிட்டுநீயும்யெதிரிமைத்தாக்கப்போறு
சிந்தனைவருவதில்லையென்னகத்தனில்சிநேகியர்களும
உந்தனைகண்டுபின்பேயொளித்திடு ஜோதிஜனகம்
தந்தனையெடுக்கவேண்டாம்தாமமாய்விட்டிடாயே

வசனம்.

சேனும்மோவுத்காண்சாயபே என்னைவொண்டியாய்விட்டுமுதல்சண்டைக்கிருந்தானைப்போலபோகிறபடியிறுமேலே உன்னைகண்டுநொடினவர்-பின்னிவிட்டவர்-அந்தவர்பக்கிரி-பணுநிகள்-இவர்களைகண்டாலசா



ரிக்கலாகாது எதிர்த்தவர்கள்பேரில் உபித்திரஞ்செய்து ஜெயமடைவாய்போய்வாரும மோவுத்கான்சாயபே.

பொருநிபந்தை.

நால்காலங்கன்மாரி கதறியேயெழுந்தமன்னன்
நிலமாப்புரவிமீதில் நெடியமோவுத்கான்சாயபு
ஆலகாலதலைதப்போல அலறியேவருகும்போது
சாலவேநபாப்புசேனை தான்மிரண்டோடுசொல்வார்

வசனம்.

அதோதெப்படியென்றால் மோவுத்கானுனவன் அதிகவுக்கிரத்துடன் ஆலகாலவிஷத்தைப்போலச் சீறிக்கொண்டு வருகிறதை நபாப்புசேனைகள்கண்டுமிரண்டு ஒருவருக்கொருவர் சொல்லிக் கொள்ளுகிறவிதங்காண்க.

நபாப்புசேனைகள்சொல்-தரு-இ-ம்-பியாகடை-தாளம்-திரிபுடை.

திருர்கதிருர்தமென்றுதேசிங்கின்மேலேறிக்கொண்டு
அதிரநடக்குவாரவன் ஆனையா
பாரில்பெருகுஞ்செஞ்சிபேரில்புகழ்தேசிங்கு
சாருமோவுத்கான் அவன்தானையா
கனக்குக்கனக்கென்னவே அனுக்கன்பரிமேலேறி
அனுக்கிநடக்குவாரான் ஆனையா
மக்காவின்குலமுதாரன்சிப்பாயிமோவுத்துகான்
ஒப்பாய்வழுநாதூரான்தானையா
சூரியன்வொளியைப்போலே மாரியாய்ப்பரிமேலேறி
வீரியமாய்வாரவனை ஆனையா
பாரில்புகழ்நபாப்பு படையைநுறுக்கவென்று
மூண்டதமோவுத்கானிவனையா

பொருநிபந்தை.

மதிப்புடன்நீலவேணி மஹாகோபத்துடனேபோய
விதிப்பயன்காணுக்க வீரன்மோவுத்கான்சாயபு
சதிசெய்யுநபாப்புசேனை தளங்களைநுறுக்கவென்று
மதிமுகவடிவையுள்ள மன்னனுஞ்சாடினானே

வசனம்.

அந்தசமயத்தில் மோவுத்துகானுனவன் நீலவேணிகுதிரையின்மேலேறிக்கொண்டு வேகமாய்வந்து நபாப்புசேனையைக் கால்மாடு தலைமாடாகவுயித்தியஞ்செய்கிறவிதங்காண்க.

மோவுத்கான்சண்டைசெய்கிறதரு-அடாணு அடதாளம்கண்ணிகள்.

நீலவேணிகுதிரையேறினன் மோவுத்துகானும்
நிபுணர்கையில்கத்திவாங்கினன்

காலருக்கிரள்போலேசீறுகிறான் — சேனைநடுக்க
   கூடக்கொண்டுபோர்செய்தாகிறான்
ஆலகாலவிஷமதாகிறான் — சுபாப்புசேனை
   அகமதாகவிலத்திலபாவிறான்
காலமாரிபோலேபாரிகைஸ் — படைகள்தன்னை
   கால்தலைகள்உருளவிசிறான்
வேலைப்போலேகுதிரைமேலேசிறான் — பாடுபாடாய்
   விழுந்தசேனைகள்மேலேயேவிறான்
நாலுபக்கந்திரும்பிவிசிறான் — மோவுத்துகா
   நாலாயிரம்வீரர்மடிந்தனர்

பொது-இப்பதை.

மோவுத்துக்காரன்போமோதிவீசும்போது
காருதுசேனையெல்லாம் சாய்ந்துபோனதேயென்று
காலதுவாக்குபோது கண்டுசேபங்கிராஜன்
ஆலதுவுன்றுவலனே அடக்கடாவிலலொருனே

வசனம்.

இக்கப்பிரகாரமாக மோவுத்துகான் சுபாப்புசேனையை சாக அடிக்கிறபோது சுபாப்புசாயபு சுபங்கிராசனையழைத்து நீபோய் அந்தமோவுத்துகானை கைப்பிடியாய் பிடித்துவாருமென்றுசொல்ல அப்படியே நல்லதென்று சுபங்கிராஜனும் தன்னுடைய சேனைகளுடன் வந்து மோவுத்தனைப்பார்த்து அடேயஞ்சாதே நில்லடாவென்று சொல்லுகிறவிதங்காண்க.

{ சுபங்கிராசனுக்கும் - மோவுத்தானுக்கும்
வா௲-தரு-இ-ம-சஹானு-அடதாளம். }

(சுப) ஆரடாநீயிங்கேபோராடாசெய்கிறாய்மோவுத்தா
(மோ) பாரடாநீவந்தாய்சாப்புக்குபகாரம்சுபங்கியே
(சுப) வார்க்காற்போலேனேபடைகூட்டிவந்தேனேமோவுத்தா
(மோ) சும்மாவிடுவேனோநானுவந்தாயேசுபங்கியே
(சுப) இப்படிசொன்னியேயிப்போதறிந்தேன்மோவுத்தா
(மோ) தேவனூர்கொள்ளைபோல்சிந்தையிலென்றுநேசுபங்கியே
(சுப) தேசிங்குக்குபகாரம்செலுத்தடாவோடாதேமோவுத்தா
(மோ) செலுத்தியேயுந்தன்சிரசைநான்வெட்டுறேன்சுபங்கியே

பொது-இப்பதை.

நான்மோவுத்கான்தன்னைச் சுபங்கியும்பலவாயேகூடாதேவனூரைக் கொள்ளைகள்மிகவேசெய்தாய்
பாடடாவெகதன்றிராணி பரிகரிய்தசனாக்கி
வாடாகூறுகூறாய் வகைக்கிறேன்வாடாவென்றான்



வசனம்.

இக்கப்பிரகாரமாக சுபங்கிராசனும் மோவுத்தானும் சண்டையிடும் வேளையில் மோவுத்கான் சுபங்கியை [illegible] சாமர்த்தியமாய் கூடி யுத்தம்செய்கிற விதங்காண்க.

{ மோவுத்தானுக்கும்-சுபங்கிராஜனுக்கும் யுத்தம்பா
தரு-இ-ம-அடதாளம்-தாளம்-ஆதி. }

சந்தாமிகுண்டுதாக்கியேவிறான் — சுபங்கிராஜா
   அஞ்சலஞ்சலாய்பிரங்கிறாகிறான்
வருகிறகுண்டுகளை கண்ணில்பார்த்ததே — நிலவேணியும்
   வளைந்துகுனிந்துதம்பிப்பாயுதே
அஞ்சலஞ்சலாய்தப்பாக்கிகுண்டுகள் — மோவுத்தன்மேலே
   அதிரவடுத்தாள்மிடிகளைபோல்வே
குண்டுசப்தம்காதில்கேட்டுதான் — நிலவேணியும்
   குதித்துப்புகையில்வெழும்பிப்பாயுதே
வந்துவெய்திர்த்துபடைகளைதிர்க்குதே — மோவுத்துகானை
   கத்துபாய்துபக்கத்தில்வீசுறார்
வீசம்வாளைவிலக்கிமோவுத்தன் — எதிர்த்தபடையை
   வின்னும்மண்ணும்கடுங்கவீசிறான்
சாகச்சாகப்படைகளைதிர்க்கதே — மோவுத்துகானும்
   சாமாரியாப்புகுந்துவெட்டிறான்
பாரிலனேகர்கூடமடிந்தனர் — படைவீரர்கள்
   பறந்திடேயாடிசெடியில்மறைந்தனர்
ஓடுகின்றபடைகளைக்கண்டு — மோவுத்துகானும்
   தேசிங்குசொன்னபடிவிட்டான்
என்னசெய்வோமென்றுபடைகளும் — சுபாப்பைகொண்டு
   இரண்டுகையால்சலாம்வாங்கிறார்
யானையின்மேலிருந்தமாவுத்தர் — மோவுத்தன்கையில்
   படவுங்காரியுங்கூடமடிந்தனர்
நாலுபக்கமும்திரும்பிவீசிறான் — மோவுத்துகானும்
   காலாயிரஞ்சேனைமடிந்தனர்
வந்தசேனைமடிந்துபோகவே — சுபங்கிராஜன்
   மயங்கிமுகம்வேறதாகிறான்
சுபங்கிநிற்கும்யானைத்தலையிலே — நிலவேணியும்
   தாக்கிக்கவேயெதிர்துவைத்ததே

காலினைவர்கவேமோவுத்தகானும் — சுபங்கிதனக்கு
காவுகொடுத்தான்மாவெட்டியானே

மாவெட்டினான்விழவேசுபங்கியும் — மோவுத்தனக்கு
மாறுல்லையால்சலாமும்வாங்கினான்

சலாம்செய்யச்சுபங்கிராஜனே — மாலகொண்டு
ஜாடவொருஷ்கவிழவேவெட்டினான்

ஒருகைவிழவேசுபங்கிராஜனும் — மோவுத்தனுக்கு
ஒருகையினால்சலாமும்வாங்கினான்

சுபங்கிராஜன்-திபதை.

அய்யாமோவுத்கான்சாயபே அறிகிலேனுன்தன்வீரம்
மெய்யவன்போலநீரும் மிகுந்தெஜமானால்கொண்டவீர்
கையலாமைனவினகள் தங்கள்கொணவேணும்
மெய்யவேபிழைத்துபோறேன் பாருடனேசலாஞ்செய்தேனே

வசனம்.

அய்யாமோவுத்கான்சாயபே உம்முடைய சவுரியத்தை யறியாமற்போனேன் என தப்பென்காகி பின்னேகளைக்காணவேணும் ஆகையால் என்னை உயிருடன்விட்டுவிடவேணும் மோவுத்கான்சாயபே.

பொது-வசனம்.

இப்படியாக சுபங்கிராசனானவன் மோவுத்கானை அநேகவிதமாக தோத்திரஞ்செய்ய மோவுதகானுக்கு மனமிரங்கி சுபங்கிராசனைப் பார்த்து சொல்லுகிறவிதங்காண்க.

மோவுத்கான்-திபதை.

அல்லவேசுபங்கியும் அருஞ்சமர்செய்யப்போது
பல்லையுங்கெஞ்சலாமே பாதகியுனக்குமுன்னே
நல்லவன்சபாபுசாயபு நாயகரையினாலிப்போ
சொல்லாமல்விடுசே சுபங்கியேயோடிப்போடா

வசனம்.

அடாகேளடா சுபங்கி நீ கெருவல்லாமையாய்வந்து உன்னுடைய மானங்கொடுத்து நீயும் ஒருகை அறுபட்டுப்போனாய் இனி உயிர் பிழைத்து போகுகிறதில் ஆசையிருந்தால் இப்போ என்னெதிரில் நில்லாமல் ஓடிப்போடா சுபங்கியே.

பொது-திபதை.

ஓடியேசுபங்கிபோகவுமவ்விதமாய்ப்படையைக்கூட்டி
காடியேகானுசாயபு கலமுடனே நேர்ந்துகொண்டு



மோடியாய்மோவுத்கானைமுறையிட்டவனைப்போலென்று
தேடிடசேனையோடு திட்டுவான்வெட்டுவானே

வசனம்.

சுபங்கிராசன் தன்னுடைய படையை மானங்கொடுத்துதானும் ஒருகை அறுப்புண்டு ஓடிப்போனதைகளைக்குறிச்சி கானுசாயபுகண்டு ஆயிரஞ்சேனையுடன்வந்து மோவுத்கான்பேரில் யுத்தியஞ்செய்கிற விதங்காண்க.

{ கானுசாய்புக்கும்-மோவுத்கானுக்கும்-யுத்தியம் }
{ தரு-இ-ம-ஆரபி-ஆதிதாளம். }

நில்லடா நில்லடா மோவுத்கா இப்போதான்வந்தேன் நில்லடா மோவுத்கா, மிக்கவசுக்கையேனடிப்பேனே உன்னைத்தக்கக்க விடாமல் சேர்வனே, ஆனமட்டுமாடா மோவுத்கா இப்போவாளால் வதைக்கிறேனடா மோவுத்கா-வாளால் மோவுத்தன் தலையைதகாண்வெக்கிறேன் பாரிந்த மோந்தான்; என்னடா மோவுத்கா நீயிப்போமொத்த இம்பபுகள்பேசுறாய் மோவுத்கா-இம்பபுகள்பேசநான்வல்லேயுன்னை எப்லோகஞ்சோகிறேன்தொலலையே, சஞ்சாவிலருகுதுமோவுத்தா நீ தப்பித்துக்கொள்ளடா மோவுத்கா-பாலாவருகுதுகானுசாநீ பாரத்துவொழுகடா கானுசா. பாலாவைக்கண்டுஞ்ளித்தானே மோவுத்தன் கானுசாயபை சிரந்துணித்தானே

போது-திபதை.

கானுச்சாயபுசலாமுஞ்செய்து சடிதுமோவுத்தன்கையால்
கானுமேமடிந்துவிழத் தளங்களையெதிர்த்துக்கொண்டு
பானுவைக்கண்ட அந்தகாரம்போல்விலகச்செய்ய
வானுலகத்தோர்காண வான்வீரர்புலம்புவரே

வசனம்.

இந்தப்பிரகாரம் நின்னைகுறிச்சி கானுசாயபும் அவனுடைய சேனைகளும் மடிந்துபோக அதைக்கண்டு ஆகாசமார்கத்தில் சகலதேவர்களும் கொண்டாட அப்போது மற்றசேனைகள் மோவுத்துகானைப் பார்த்துப் புலம்பி ஓடுகிறவிதங்காண்க.

சேனைகள்-தரு-இ-ம-புன்னுகவராளி-தாளம்-ஆதி.

ஓடிப்போவோம்வாரீர் — அண்ணமாரே
ஓடிப்போவோம்வாரீர்

ஓடிப்போவோம்வாரீர் ஒருமட்டாய்சேனையை
நாடிக்கொல்லுகிறான் நாங்கள்நிற்கமாட்டோம் (ஓடி)

ஆற்காடுவிட்டுகோம் அறியாமல்வந்தோமே
சாககாடுமோவுதத்தன் சாயபைக்காணுமல் (ஓடி)

வயிரவாக்கியமாக மன்னவன்வருகிறான்
உயிருபிழைத்திருந்தால் உப்புமாறிபுண்ணலாம் (ஓடி)

விடிவாசல்விட்டு வெந்தன்பேச்சைக்கேட்டு
ஓடிவந்தவேனே பொருநாட்டமடிந்தாரே (ஓடி.)
சேவுரானையானைவிட்டுவந்தோமிப்போ
ஆவலாய்ப்போவோமென்று லடிவபர்குமர்புகே (ஓடி.)
அண்டையில்கனைப்பாமே பெண்டாட்டி கிரிப்பானே
மொண்டிசெய்தோமானுல் தண்டமாயுநன்வே நே (ஓடி.)
ஒருவீச்சுக்காயிரம் உருளுதே தலைகளும்
மறுவீச்சுக்கிருந்தால் மாண்டுபோயிருப்போம் (ஓடி.)

பொது-இபதை.

படையதமுறிக்கூவோட பாசகாட்டியங்களாடும்
தடையில்லாநீலவேணி தன்னையுந்திருப்பிக்கொண்டு
அடைவுடன்தேசிங்குதன்னை அருமையாய்க்காணவென்று
கடைவுடன்மோவுத்கானும் கண்மையாய்வருகின்றனே

இதுவுமது-இபதை.

வெக்கிமாய்மோவுத்கான் வீரனாய்வருகுபோது
அதிபனுழன்னேயிருலே தப்பினபாபுநாய்க்கன்
அத்திமரத்தின்மீதில் அருகிழல்மறைவாய்நின்று
பதிசஞ்சாமிகொண்டு படலேன்றுபனித்தார்த்தான்

இதுவுமது-இபதை.

குண்டுகள்காணும்வந்து குதிரைமேல்வரும்மோவுத்கன்
மண்டையிலாருக்கேபோக மண்ணின்மேல்விழுந்தானப்போ
சண்டிகைவோர்கள்போற்றும் இலையல அலலோவென்று
அண்டிதருமுடையவீரன் தம்முடன் உயிர்விட்டானே

வசனம்.

அகோ தெப்படியென்றால்பாப்புவின்சேனைகள்சிதறியோடிப்போகது காதக்கண்ட மோவுத்காநுவலன் தனக்கு எதிரிகளில்லையென்று தேசிங்குராசனிடம் நீலவேணிகுதிரையுடன் வருகிறபோது சண்டையில் அடிபட்டு ஓடிப்போன பாபுநாய்க்கன் மோவுத்துகான்வருகிறவழியில் அத்திமரத்தில் உச்சிலேறி சஞ்சாமியை பார்செய்துக்கொண்டு வாறுகிற மோவுத்துகான்மண்டைக்குச் சரியாய் படலென்றுசுட அந்தகுண்டுமோவுத்துகான்மண்டையில் பாய அதனுல் கீழேவிழுந்து சிவேனைதனை தேசிங்குராசனையும் தன அஇஷ்டதெய்வத்தையும் நினைத்து உயிர்விட்டான் அதன்பின்பு நீலவேணியானது அதிகதுக்கத்துடன் கதறிக்கொண்டு தேசிங்குராஜன் முன்வர அதைக்கண்ட தேசிங்குராஜனானவன் முகம்வாடி நீலவேணியைப்பார்த்துச் சொல்லுகிறவிதங்காண்க.

தேசிங்குராஜன்-இபதை.

சோரர்நீலவேணி பாசனைப்பறிகொடுத்து
சோகமெய்யங்கள்முன்னே நீலபறுசொல்லவந்தாய்



கூராகமன்னன்மாண்ட குதரீதத்திரம்கண்ணில்பார்க்க
சோய்கிமெய்யகளோடே சீக்கிரமடைந்திடாயே

வசனம்.

ஆ-ஆ-நீலவேணியே அரசனைப் பறிகொடுத்து எங்கள்முன்னே சேதிசொல்லவாவந்தாய் நல்லது மோவுத்கான் இறந்தவிடத்தை யெங்களுக்குக்காட்டும் நீலவேணியே.

இதுவுமது-இபதை.

சொங்கனைத்தவிர்த்துவந்து சூரனேமாண்டாயிப்போ
கற்பனைப்படியோவுந்தன் கடாக்ஷமில்லைவுதானே
அற்பனேவுன்னைக்கொன்றான் அவரைஜெயித்துமீள்வேன்
எப்படியுன்னைவிட்டு இருப்பனோமோவுத்கானே

வசனம்.

அகோசேனும் மோவுத்கானே யென்சொல்லைக் கேளாமல்வந்து வெகுபடைகளைக்கொன்று நீயுமிறந்துபோனையே நான் என்னமாய் உயிருடனிருப்பேன் மோவுத்கானே.

{ தேசிங்குராஜன் புலம்பல்-தரு-இ-ம்-அடாணு
{ தாளம்-திரிபுடை-கண்ணிகள்.

என்னைத்தனியேவிட்டு — யெங்கேபோயொளிந்தாயப்பா
அன்னைதந்தையுன்னைத்தேடி — அன்பாய்வருவாரென்று
எண்ணியிருந்தவர்கரு — இப்படியுஞ்செய்யலாமோ
மதிநெறுவயதையுள்ள — பாலன்மோவுத்கானே
எதிரிட்டுக்கொல்றவரா — எமலோகஞ்சேர்ப்பதேப்போ
உன்னையெதிர்த்தார்கள் — உலகத்திலுண்டோசொல்லாய்
என்னவிதத்தினுலே — யிறந்தாய்நீயிப்பொழுது
கத்திகேடயம்பாலா — கையில்எடுத்தையானல்
உன்னைவெற்றிகொள்வாருண்டோ — ஒழுவினைப்பயனிதுவோ
இன்னைஞ்சிறிதுகாலம் — இருந்தாகநீயாளாமல்
எத்தனையும்தனுயிர் — எமலோகஞ்சேர்ந்ததையோ
பாதகியினால்உத்தனுயிர் — பரகதிசேர்ந்ததையோ
வெற்றிப்போர்வாகைவென்று — விடைபெற்றுவந்தையேநீ
இத்திசையிலுன்னைக்கொன்றோர் — இன்றொன்றுசொல்லாயப்பா

இதுவுமது-இபதை.

அய்யாமோவுத்கான்சாயபே அதிலேனுந்தன்வீரியம்
உய்யவேபெரும்பெற்று உகந்துநீவருகும்போது
செய்கவராரோவுன்னையன் இமோகமுமானதகுதையோ
கையினைமுகவிட்டாய் கர்த்தனேயென்னசெய்வேன்

வசனம்.

அய்யா என்சிநேகிதனை மோவுத்கான்சாயபே நீசண்டைசெய்து போர்பெற்றுத்திரும்பிவருகிறபோது உன்னைவதைத்தவரின்னரோ

...று சொல்லாமல் என்னைத் தனியேவிட்டு நீயுமிறந்துபோனாயே யாவுந்தா னென்செய்வேன் கர்த்தனே.

இதுவுமது-திபதை.

ஆவிபோய்அரன் றடியின்னர் அழுவதால்பலனுண்டாமோ
மேவியமந்திரிமாரே மேன்மையாய்க்கோரிகட்டி
தாவிமோவுத்தான் தன்னைச் சார்ந்திடுநீலவேணி
ஆவியைப்போக்கிக்கூட அடக்கிவந்தனைசெய்வீரோ

வசனம்.

அதோகேளும் மந்திரிமார்களே மோவுத்கானை பல்லக்கின்மீதி வைத்து எடுத்துக்கொண்டுபோய் அவன்குதிரையாகிய நீலவேணி யையுங்கூட அடக்கஞ்செய்து கோரிகட்டிவந்து உத்தரவுசொல்லும் மந்திரிமார்களே.

பொது-திபதை.

சொற்படிமந்திரிமார்கள் கூறும்அஸ்வக்கூட
அப்படியாகவைத்து அனேகதர்மங்கள்செய்து
மைப்பொருராசன்முன்னே மன்னவருரைக்கக்கேட்டுக்
கைப்பிடிபரிமீதேறி காணலாம்நபாப்பையென்றான்

வசனம்.

அதோதெப்படியென்றால் மந்திரிமார்கள் தேசிங்குராசன்சொன் படியே மோவுத்கானையும் நீலவேணிகுதிரையையும் அடக்கஞ்செ ய்து கோரிகட்டும்படியாய்த்திட்டஞ்செய்து தேசிங்குராஜனிடம்வந்து சொன்னமாத்திரத்தில் தன்னுடைய பாராசாரி குதிரையின்மீது ஏறி கொண்டு நபாப்புநக்கேவெல்கேயென்று புறப்பட்டார்கள்.

தேசிங்குராசன்-திபதை.

ஹரிஹரிரங்கநாதா ஆழியைத்தரித்தவையா
வரிகடல்மேல்துயின்ற வித்தகாவைகுந்தவாசா
பரிவுடனுந்தன்பாதம் பணிந்துயான் மிகத்துதித்தேன்
வரிசையாய்க்கேளும்மந்திரி வருத்துவதைசெய்குவேனே

வசனம்.

ஹரிஹரிரங்கநாதா வைகுந்தவாசா அடியேன் நபாப்புமீதில் யுத் தத்திற்கு இதோபோகிறேன் என்பேரில்பட்சம்வைத்துக்காப்பாற்றி ஜ யமுமையாசுவாமி அதோகேளும் மந்திரிமார்களே நான் சொல்வதை கேட்டுக்கொண்டே நடவுங்கள மந்திரிமார்களே.

{ தேசிங்குராசன் யுத்தத்திற்கு வருகிறபோது மந்திரிமுதலா னவர்களுக்குச் சொல்லுற-தரு-இ-ம-காம்போதி-அடதாளம் }

வாரும் வாரும் வாரும் வாரும் மந்திரிமார்களே
பாரும் பாரும் நபாப்பினிட படைகள்தன்னையே
காணுமிப்போ சொல்கிறேன்சேரும் நலமதாகவே
சேரும்படையில்இப்போ நீங்கள்சிக்கிரமாகவே
அந்தணர்பாதேசிங்கை அகலவோட்டுவீர்



கர்மையெதிர்த்துவந்தவரை கன்றுய்வாட்டுவீர்
அமிர்த்தர்நிவாதர் அபாயமென்றவர்
தருமத்துக்கவலைவிட்டுத் தனங்களைக்கொல்வீர்
சொன்னபடியேகேட்டிடும மந்திரிமார்களே
சுருக்கினில்நபாப்பைக்கொல்வோம் மந்திரிமார்களே

பொது-திபதை.

திறமதுமிகப்படைத்த தீரர்களுடனேராஜன்
கரத்தனில்கத்திபாலா கட்டாரி அம்புகொண்டு
பாரத்திமேற்பரிமீதேறி பானையத்தன்னில்வந்து
பிரண்டிடும்தளத்துமீதில் வீர்செய்தான்போர்செய்தானே

வசனம்.

அதிகவல்லமையுடைய மந்திரிமுதலிய தளத்து சேனைகளுடன் தேசிங்குராசனானவன் கையில் கத்திபாலாகட்டாரி இன்னஞ்சகல ஆ யுதங்களைக்கொண்டு பாராசாரிமேதேறி யுத்தகளம்வந்து சொல்லுகிறவி தங்காண்க.

தேசிங்குராசன்-திபதை.

ஆரடாமோவுத்கானை வதமதாய்வதைசெய்தோர்கள்
கூறடாயெனக்குஇப்போ கொப்பெனவேயிறந்து
பாரடாவென்தன் சேணி நபாப்பைநான் அதமதாக்கி
ஊரடா ஆர்க்காடுதேடி யோட்டுவேன் ஓட்டுவேனே

வசனம்.

ஆ-ஆ-ஆ-ஆரடா என துகினேகிதனானமோவுத்கான்சாவதைச்சூ அமார்க்கமாய் அதஞ்செய்தவர்கள் எத்தனுக்குச் சொல்லுங்கள் இதோ அந்தநபாப்பை என்கைபால்வாலே குத்தி அதமாக்கி ஆர்க்காட்டை க்கொள்ளையடிக்கிறேன் உங்களாலானதைப்பாருங்கள்படைகளே.

{ தேசிங்குராஜன் சேனைகளுடன் சண்டைசெய்கிற தரு-இ-ம-அடாணா-தாளம்-திரிபுடை. }

பாராசாரிகுதிரையேறினான் — தேசிங்குராஜன்
டாலாயுதங்கையில்வாங்கினான்
கோரகோச்சிப்படையைவீசினான் — நபாப்புபானையும்
செடிபோயோட்கூறாக்கினான்
ஆறாய்க்குருதிபெருகியோடுதே — செத்தபிணங்கள்
அதிலேமிதந்துதெப்பலாடுதே
போரால்செருத்தபானையக்காரர் — வந்தெதிர்த்தவர்
பின்னிடைந்தவர்முன்னுசுருங்குகிறார்
வீராதிவீரன்கோபமாகினான் — கர்ச்சனைசெய்து
வீசுக்காயிரம்பேரைவீசினான்

சாய்போட்டபாளையக்காரர் தேசிங்கைக்கண்டு
கொண்டைவிட்டவர்நடுப்பதுக்கிருஞர்
மாரோடுமாரோடுசேராமலென்று சேர்ந்துபட்டு
சாவுத்துக்காரனவன்கெதிர்த்தானே
வாராதாவுத்தன்னைக்கண்டானே தேசிங்குராஜன்
மனமகிழ்ந்தவன்முன்னிலின்றானே

பொது-இபதை.

வீரியன்தேசிங்குராசன் வெகுவிஜயமானகொல்லக்
காரியமறிந்துபாப்பு கர்த்தனிசைதப்படியேகொண்டு
வாரிபோல்படைகளசூழ வள்ளலைவெல்வதற்கு
முரியேதாவுத்துக்காரனாப்பு முன்வந்தேதான்நின்றானே

வசனம்.

இப்படியாகத் தேசிங்குமஹாராசன் சுவாமியினுடைய சேனையைத் தின்று வெண்மையாக்கொல்லுகிறபோது அதைக்கண்ட மாப்பிள்ளை அதிககோபமாகித்தனக்குள்ளதந்த விசேஷித்தனதாவுத்துக்காரனையும் அவனும் ஆனைமேல்பேரி லேறிக்கொண்டுவந்து தேசிங்கைக்கண்டு சொல்லுகிறவிதங்காண்க.

{ தேசிங்குராஜனுக்கும் - தாவுத்தனுக்கும்-தர்க்கம்
தரு-இ-ம-அடாணா-தாளம்-ஆதி. }

(தாவு) ஆரடாநீஇங்கே அறியாதபாலகன்
சிறுபடைகொல்லவந்தாணிபோலவுனக்கு
(தேசி) சொல்லாதீர்ட்டேஞ்சுவானைப்போலே
நல்லவார்த்தைகள் சொன்னாலுன்னைவிடமாட்டேன்
(தாவு) விடமாட்டேனென்றுநீ விகடம்பேசுறாய்கம்மா
கடைமாடாமல்காப்பைபக்காணலாம்வாடா
(தேசி) வாடாபோடாவென்றுவாய்மதம்பேசுறாய்
கேடுவந்துன்மதிகெட்டுப்போச்சுதோபோடா
(தாவு) போடாவாடாவென்று பிழைவார்த்தைகள்சொன்னாய்
மூடாவுன்படைகளைமுன்னேவெட்டுவேன்பாராய்
(தேசி) வெட்டுவன்னைத்தான் வீரியனென்றுசொல்லித்
திட்டமாய்பாப்புஉன்னை கொல்லவைத்தானோடா
(தாவு) வீரியன் மியல்லாமல்வீணிலேநுழைந்தேனோடா
பரிப்பரிதேறி படையிலேவந்தாய்
(தேசி) படைக்குவந்தாலென்ன பரிமேலிலிருந்துடா
அடக்கியெதிர்த்தவெல்ல ஆண்பிள்ளைவாடா



(தாவு) ஆண்பிள்ளைகளென்று அனேகம்பேரைத்தனைத்து
மாண்டுபோகஇங்குவந்தாய் நீபோடா
(தேசி) வந்தாய்வந்தாயென்று வாய்மதம்பேசுறாய்
சந்தம்மோவுத்தன்மதி உன்னைத்தீர்ப்பேனே

பொது-இபதை.

செங்கைமுகக்கண்ணாளன் திரன்தாவுத்தான்தன்னை
அங்கிருந்துகொல்வேனென்று அரசன்தேசிங்குசொல்லத்
தங்கியும்பரிமேல்சேனைத் தளமெனமொன்றாய்க்கூட்டி
முந்தியேதேசிங்குதன்மேல் முடுக்கியேபோர்செய்தானே

வசனம்.

தேசிங்குராஜனும்தாவுத்துக்காரனும் அனேகவார்த்தைகள்பேசிக்கொண்டு அதிககோபக்கினிமிகுந்து இருவரும் சண்டைசெய்கிறவிதங்காண்க.

{ தேசிங்குராஜனுக்கும் தாவுத்துக்காரனுக்கும்
யுத்தம்-தரு-இ-ம-சௌராஷ்டிரம்-அடதாளம் }

தந்தானத் தனதான தானன தத்தானதானா
தந்தானத் தனதான தானன

கொண்டவாகவந்தவிழுதே தேசிங்குராஜனை
ரண்டாயிரம் ஆனைக்கூட்டங்கள்
ஆனைக்கூட்டத்தைக்கண்ணாலேகண்டானே தேசிங்குராஜன்
அந்தவேடிக்கைகண்டுநல்பார்த்தானே
பார்த்தவுடன்கோபமேவிஞ்சி ஆனைக்கூட்டங்கள்
பகரிபுலக்கையாலேசாடிக்க
உலக்கையெடுத்துஜாடியானைகளை தேசிங்குராசன்
உருளவெட்டினான்பூமிதன்னிலே
இருப்புலக்கைகளைத்தூக்கிப்போட்டதே சிலதுயானைகள்
இருகால்முடக்கிச்சலாம்வைக்குதே
யானைவிலங்குகளை அறுத்துப்பாயுதே மாராசாதி
வெகிரிவிழுந்துசாம்பிப்பாயுதே
சங்கிலிபாயலேவந்து மறைக்குதே மாராசாரிவைவ்
கைக்குதலைமிதிக்க ஆடுதே
காலமிகுக்கும்குதிரைதன்னையே தேசிங்குராஜன்
சுந்திரயால்விசர்த்தலைகள் உருளுதே
உருளப்பரிகள்திரளாய்வருகுதே தேசிங்குசையால்
வீச்சுக்காயிரக்குதிரைமடியுதே

குமபல்கும்பலாய்க்குதிரைக்கூட்டந்தன் மாவுத்தமானைக்
கூட்டப்போட்டுமேலேவிழுந்தே
கண்கள்சிவந்துதாவுத்காறும் தேசிங்குராசனைக்
கத்திகையில்வாங்குமாறென்றான்
அந்தசொல்லை அரசனுங்கேட்டு தாவுத்கன்மேலே
அதட்டியேகொக்கரித்துவாரானே
சிவிட்டுமுன்னமேதாவுத்காறும் தேசிங்குபாலகனைத்
திரளுடன்வந்துசூழ்ந்துகொண்டானே

பொது-வசனம்.

தாவுத்கான் யானைகுதிரைகளைவிட்டு அனேக யுத்தியஞ்செய்ய அதுகளையெல்லாம் தேசிங்குராஜனானவன் கொன்று காலபலங்களை மாறுபடாருய் வெட்டிக்குவிக்கிறபோது தாவுத்காறுக்கு மிகுந்தகோப மாகிதுபாக்திசஞ்சாயியினலேதேசிங்குராஜன்மேல் யுத்தியஞ்செய் திறவிதன்காண்க.

இதுவும்-௫-தரு-இ-ம்-காம்போதி-அடதாளம்.

ஆடாநீமெத்தப்போராடாசெய்கிறாய்
அறியாமல்சான்திராணி அலைகிறாய்பயலே
அலைகிறாயென்றுநீமலைப்பாய்பேசுறாய்சும்மா
தலைமன்னைடமண்ணில்விழஜாடுவேன்பாராய்
ஜாடுவேன்பாரெந்தன்சஞ்சாகபாரிறல்
கோடுகோடுவென்றுகுப்புறவிழுகவே
அடித்துவிழவேசெய்வாய் ஆண்மைப்படைத்தவனோ
முடிக்கவந்தாயோவென்றுமுடிக்கிறானப்போ
முடிக்கும்ராஜன்மேலேகொடிக்குள்தாவுத்துக்காறும்
கடுக்கச்சஞ்சாவிகுண்டுகடுகவேயெவ்றான்
எவியகுண்டுகள்இடிபோல்வருகுமுன்னே
தாவிக்குதிரையதுதாழ்க்கதுபிகவே
தாழும்புரவிதன்னை தாவுத்கன் காண்கண்டு
வேழம்திருப்பிக்கத்திவீசினனப்போ
தாவுத்தன்சத்திரைத் தடுக்கவேடயத்தாலே
கோபித்துப்பரியானையேல்லைவைத்துக்காலே
காலைமத்தகந்தன்வில்கண்டுகொவுத்துக்காறும்
சாலதேசிங்கைப்பார்த்துச சலாஞ்செய்தானப்போ



சலாஞ்செய்ததாவுத்கன் தன்னைத்தேசிங்குகண்டு
தலைமண்டைமண்ணில்விழ டாறுகத்திர்த்தான்

பேர்த்-இபதை.

அலைபுகேதுல்லாவென்று ஆண்மையைக்கொண்டசேனை
அலையுகேபடைகளெல்லாம் அரசன்தேசிங்கைக்கண்டு
மலைபதுபோலேமன்னவன் மாண்டவன்மேலேயேறி
அலைய்துபெருகு-ஆறு சங்கராபரணிசேர்த்தான்

இதுவுமது-இபதை.

பரிமைவிட்டிறங்கித்தைக்கான்பாங்குடன்சுத்திசெய்து
ஹரிஹரிங்கர்பூஜை அன்புடன்செய்யும்போது
அரவிபதேசிங்குராஜன் யெங்கனைச்சதிகள்செய்யப்
பாஷியசகுனிபோலப் பாங்குடன்தோன்றிறனே

வசனம்.

அகோதெப்படியென்றால் தேசிங்குராஜனானவன் கப்புப்பரிஸ் யுத்தத்திற்குவந்து சுபாய்பைப்போலவேஷம்போட்டுக்கொண்டு யானை யின்பேரில்வந்ததாவுத்துக்கானைவெட்டி ஜெயமடைந்து குதிரையைத் திருப்பிக்கொண்டு சங்கராபரணிஆற்றின் வந்து இறங்கி ஸ்நானஞ்செ ய்து ஸ்ரீரங்கநாதனைப்பூஜைசெய்கிற சமயத்தில் நாயாதியான தேசி ங்குராஜன் சகுனியைப்போல முன்னே வந்து சொல்லுகிற விதங்கா ண்க.

தேசிங்குராசன்சொல்-தரு-இ-ம்-பந்துவராளி-தாளம்-திரிபுடை.

| | |
|---|---|
| பத்தியாய்த்தேசிங்குராஜன்முன்னேவந்து<br>பண்புடன்சொல்வானே | அய்யா |
| எத்திசையும்புகழ்பெற்றதேசிங்கேநீர்<br>ஏன்சண்டைவிட்டுவந்தீர் | அதோ |
| சுத்திசேயானைகள்கூட்டம்வெளியில்<br>சூரியன்ஒளிவதுபோல் | இதோ |
| எத்திசையுங்காணஜண்டாபறக்குது<br>இப்போதெழுந்துவாரீர் | அதோ |
| சத்திபரிசையுமெற்றிமுழங்குது<br>நாதியில்கேளுமையா | சுபாய்பை |
| வைத்துதாவுத்தனைவெட்டிவந்ததென்ன<br>வகைதனைச்சொல்லுமையா | நீர் |
| சித்தமுணர்ந்துசுபாய்பைச்செயித்திட்டால்<br>செஞ்சிமங்காமே | மனம் |
| வைத்துஅமர்செய்து வெற்றிபெற்றுவந்தால்<br>மண்டலம்போமே | சேனும் |
| உத்தமனேசுபாய்பைகொன்றுவந்தால்நம்மை<br>உலகத்தார்புகழ்வாரோ | அய்யா |

க்ஷத்திரியகோத்திரம்வினாக்கும்டத்தானே
சாமார்த்தியமுள்ளவனே — இந்த
எத்திசையும்புகழ்பெற்றதேசிங்கேநீர்
வஞ்சனைவிட்டுவந்தீர்

நீன்சிங்குராசன்-திபதை.

சண்டையைவிட்டுவந்தால் சாமார்த்தியமாகச்சேரமாட்டோர்
அண்டையிலேபோர்ப்புகழ்ந்து ஏகாந்தமிருக்க
கண்டிதமுடையவீரம் கவிகைவிட்டோமேமீ
அண்டமாய்நாப்புகழ்வீரத் தவளித்துவருகுவாயே

வசனம்.

அதேதோசேருமையா தேசிங்குமஹாராசனே அனேகம் அனேகே னைகளைக்கொண்டு நாப்பைபாவிட்டுவந்தால் சதிமாதுக்க ராசாக்கள் நகைப்பார்கள் ஆனதால் புகழ்பெறத்தக்கதாக நாப்பைவெட்டி செயம்பெற்றுவாரும் மஹாராசனே.

பொது-திபதை.

சிறுக்குடன் நீன்சிங்குசொல்லக் கர்த்தன்தேசிங்குபார்த்து
வெருக்கலேவிழித்து அப்போ வீணைவினிஸ்பாரியேதெரி
சீறுக்குடன்வருகுபோராடு நியாயமாய்நாப்புகண்டு
வருத்தமாய்நல்லனைண்டை வணக்கமாய்ச்சொல்லுவானே

வசனம்.

இவ்விதமாகத் நீன்சிங்குராசன் சொல்லியதை தேசிங்குராசன் கேட்டு அதிகோபத்துடன் பாராசாரியின்மீது ஏறிக்கொண்டு வருகிறதை நாப்புகண்டு தோன்றமல்லனுடன் சொல்லுகிற விதங்காண்க.

நாப்பு-திபதை.

வாடாநீதோன்றமல்லா வருகின்றான்தேசிங்குபாலன்
போடாநீராஜிசெய்ய புகழ்பெறச்சொன்னியோதேன்
கேடாகவருகுதுடானே செடியுடன்திருப்பிவந்தால்
தோடாவுமபதக்கந்தாரேன் தோன்றவேபோவாய்நீயே

வசனம்.

அதோவாரும் தோன்றமல்லனே அதோவருகிற தேசிங்குமஹாராசனை சமாதானப்படுத்தி திருப்பிவந்தையேயானால் வேண்டியவெகுமதிகொடுக்கிறேன் சீக்கிரம்போய்வாரும் தோன்றமல்லனே.

தோன்றமல்லன்-திபதை.

அல்லவேநாப்புசாயபே அவன்மீதில்தாவுக்கும்போய்ச்
சொல்லவும்போகாதத்தருணத்தில்வருத்தப்பட்டேன்
மெல்லவேராஜிசெய்ய மெய்வீரமாயிருக்குதையோ
கொல்லுவேயுந்தன் ஆக்கினை கோவேசான்போகேனையா

வசனம்.

சலாஞ்சலாம் அனேக நாப்புசாயபே முன்னாலே தேசிங்குராசன்மீதில் தாவுக்குப்போய்ப்பட்டபாடுபட்டேன் இப்போது அவ



னைப்பார்த்தால்சரீரம்நடுக்குது ஆனால் உம்முடைய ஆக்கினைக்குப்பயந்துபோய்வருகிறேனையா நாப்புசாயபே.

தோன்றமல்லன்வருகிற-தரு-இ-ம்-கேதாரகௌளம்-ஆதிதாளம்.

என்னமாய்தேசிங்குகண்டு அல்லாவே — இப்போ
ஏதுசேதிநானுவார்த்தைசொல்லுவேன் அல்லாவே — என்னை
கோபத்துடனேவாரான் அல்லாவே
கொல்லநிச்சயந்தான் அல்லாவே — இப்போ
ராஜினுசெய்யப்போனேன் அல்லாவே
நறுக்குவது நிச்சயந்தான் அல்லாவே — எனக்கு
என்கண்மேல்கடாக்ஷம்வைத்து அல்லாவே
நீநன்னைவராமல்காப்பாய் அல்லாவே — என்ன
தேசிங்கைக்கண்டுவந்தால் அல்லாவே
தேகம்உள்ளவரைக்கும் அல்லாவே — நான்
ஆதேசிபாதேசிகட்கு அல்லாவே
அன்னமபடைத்துவைப்பேன் அல்லாவே — மன்னன்
எச்சலைத்தானுமிழ்ந்து எட்டுகோமம்போட்டு
எதிரொட்டுவந்தான்தோன்றமல்லன்

தோன்றமல்லன்-திபதை.

மன்னவாசெஞ்சியாளும் மகிபனேதேசிங்குபாலா
அன்னவன்நாப்புசாயபு அனுப்பினான்சமாதானமாக
உன்னையசெஞ்சிதன்னை உந்தனுக்கேதேனென்றான்
உண்மையாய்மனம்பொறுப்பாய் நலமுண்டுநாமனுமையா

வசனம்.

ஜெயம் ஜெயம் அனேகசலாம் தேசிங்குமஹாராசனே நீர்வருகிறவேகத்தை நாப்புகண்டு பயந்து என்னை உம்மிடத்தில் சமாதானஞ்செய்வதற்கு அனுப்பிவைத்தானையா தேசிங்குமஹாராஜனே.

தேசிங்குராஜன்-திபதை.

ஆடாதோன்றமல்லா அறிவுகெட்டவனேபோடா
சேடாநாப்புவின்தன் சேமமைத்துணைத்துயானும்
ஊடா ஆர்க்காடுதன்னை யொருநொடிதனிலேயிப்போ
கூடாகொள்ளைசெய்வேன் கொப்பெனவோடிப்போடா

வசனம்.

அடா கேளும்பிள்ளாய் தோன்றமல்லனே முன்னாலேயில்லாத ராஜிப்போசொல்லவந்தாய் நான்உன்னுக்கையறுக்கது அந்தநாப்பைக் கொன்று ஆர்க்காட்டை கொள்ளையடிக்கிறேன் இப்போபாராமல்லா.

பொது-வசனம்.

இப்படியாகத் தோன்றமல்லன் சொல்லியுங்கேளாமல் தேசிங்கு

[illegible]

## நபாப்பு-வசனம்.

[illegible]

## தேசிங்குராஜன்-இரதை.

எந்நேரமும் [illegible]
[illegible]
இன்னமும் [illegible]
[illegible]

## வசனம்.

[illegible]

## பொது-வசனம்.

[illegible]

{ தேசிங்குராஜன் யுத்தஞ்செய்கிற-தரு-
இ-ம-அருட்டி-தாளம்-திரிபுடை. }

[illegible]



[illegible]

## தேசிங்குராஜன்-இரதை.

[illegible]

தேசிங்குராஜன்புலம்பல்-தரு-இ-ம-கேதாரகௌளம்-ஆடதாளம்.

பரியேயுன்னைவிட்டுத்திரியேன் (பகி)
[illegible] (பகி)
[illegible] (பகி)
[illegible] (பகி)
[illegible] (பகி)

## பொது-இரதை.

[illegible]

## வசனம்.

[illegible]

{ தேசிங்குராஜன்நபாப்புசேனையுடன்யுத்தஞ்செய்கிற
தரு-இ-ம-செஞ்சுருட்டி-தாளம்-திரிபுடை. }

[illegible]

விடையில் ஆறும் அயனும் மாலும் - மலர்கள் பீறுசொரியவே
படபடென்னவே தத்தகம்மல் - தம்பிராஜன் மயங்கவே

பொது-திபதை.

ஆனையாயிரங்களான அஸ்வங்கள் லெக்ஷமான
சேனையாயிரங்களான சேவகர்வீரரானான
தானவன்களை த்தாராஜன் சவித்தவன் கைகள்சோர
ஆனையைக்காத்தகல்லனன் அதனிறால் மயங்கிறானே

வசனம்.

அந்நூறிலை படைவீரர்கள் முதலிய அநேகம் சேனைகளைக்கொல்ல அதினாலே கைகள்சோர்ந்து ரத்தகாவல் மயி ஸ்ரீரங்கநாதருடைய நினைப்பினாலே ஒன்றுந்தோற்றமல் மயங்கி நிற்கிறபோது நவாப்பு சொல்லுகிற விதங்காண்க.

நவாப்பு திவதை.

பையவே தேசிங்குராஜன் பராக்கிரமத்தனர்ந்து இப்போ
மெய்யது சோர்ந்து தானும் விசனமாயிருக்கிறான் காண்
சைகையாய் மந்திரிமாரே சமயமும் வாய்த்தது இப்போ
கையுடன் பிடித்துக்கொண்டு கடுகென வந்திடீரே.

வசனம்.

அகோ வாரும் மந்திரிமார்களே தேசிங்குராஜன் மதிமயங்கி நிற்கிறான் அவனைக் கைப்பிடியாய்ப் பிடித்துக்கொண்டு வாருங்கள் மந்திரிமார்களே.

பொது-திபதை.

இந்தசொல் நவாப்புசொல்ல இசைந்து தேசிங்குமுன்பாய்
வந்தவர் முகத்தைப்பார்த்து மயங்கியே விசனமென்று
சிந்தனையாக நொந்து திரும்பியே முகம்பாராமல்
விந்தையிதென்றுசொல்லி விரைவுடனோடினாரே.

வசனம்.

அந்த நவாப்புசாயபு தேசிங்குராஜனைக் கைப்பிடியாய்ப் பிடிக்கச் சொன்னவுடனே கிட்டவந்து ஒதுங்கிப்பார்த்து சிங்கத்தினிடத்திலே போனால் மோசம்வருமென்று திரும்பிப்பாராமல் நவாப்பினிடம்வந்து இனிமேல்விட்டிருந்தால் மோசம்வருமென்று சொல்ல நவாப்பானவன் ஓடி மலைபடிவாரத்தில் ஒருகுகையில்போய் ஒளிந்துக்கொள்ளச் சேனைகளும் பயந்து ஓடிவிட்டபின்பு நடக்கிற விதங்காண்க.

இதுவுமது-திபதை.

மன்னன் தேசிங்குராசன் மயக்கமுந்தெளிந்து அப்போ
உன்னியபடைகளைத்தேடி யுமுன்னும்பார்த்தான் [illegible]
தன்னுள் முன்னெதிர்த்த ஜனம் காணியில்லாதென்று
அன்னவன் மனம் நொந்து அப்பொழுதே [illegible]

தேசிங்குராஜன் மரணமடைந்த-திபதை.

சிரத்தைய [illegible] நிச்சயங்கொண்டு
கரந்தனில் கத்திகொண்டு கையமார்க்கத்தில் [illegible]



உரத்தினை விரித்துக்காட்ட உடனே வந்து [illegible]
புரந்தரன் லோகந்தன்னில் புண்ணியமடைந்திட்டானே

வசனம்.

அகோதெப்படியென்றால் தேசிங்குராசனானவன் தன்னுடைய மயக்கம் தெளிந்து முன்னேயெதிர்த்த படைகளை நாலுபக்கமுந்தேடிப்பார்த்துக்காணாமல் நாம் செய்யமடைந்தோமென்று [illegible] பிராணனை [illegible] இந்த இரண்டையும் [illegible] ஸ்ரீரங்கநாதரையும் [illegible] மார்க்கத்தில் [illegible] தன் மார்பை விரித்துக்காட்டிக் கத்தியால் குத்திக்கொண்டு பிராணனை விட்டு அந்த தேசிங்குராசன் ஸ்ரீரங்கநாதர் அரிஅரி யென்று பிராணனை விட்டு ஸ்ரீரங்கநாதருடைய பாதாரவிந்தம்போய்ச் சேர்ந்தான். அதன்பிறகு நடக்கிற விதங்காண்க.

பொது-வசனம்.

அகோதெப்படியென்றால் தேசிங்குராசனானவன் ஸ்ரீரங்கநாதனை நினைந்து தன் கத்தியால் உயிரைப் போக்கிக்கொள்ள இறவகனை [illegible] யெல்லாம் குகையில் ஒளிந்துக்கொண்டிருந்த நவாப்பானவன் இறந்து கிடக்கிற தேசிங்குராசனிடம் வந்து புலம்புகிற விதங்காண்க.

நவாப்புபுலம்பல்-[illegible]

அல்லாவோ அல்லாவோவென்று அழுகிறான் நவாப்புசாயபு
வீரியத்தைக்காணவேயன் [illegible] தேசிங்குராசா
சண்டையுண்ணவேண்டாமிப்போ சமாதானம் வாருமென்றேனே
அந்தசொல்லைக் கேளாமல் நீ அரசனே மாண்டாயிப்போ
எந்தன் சொல்லைக் காதுகேட்டு இனியசெருவியாமலே
வந்தாயிங்கே சேனைதன்னை வதைத்தீரையாயிப்பொழுது
என்னுடைய சேனையெல்லாம் இறந்தாலும் பெரிதல்ல
உன்னுயிர்போனதினாலே உருகுதென் தேகமெல்லாம்
உன்னைப்போல் சிப்பாய்மானோர் உலகத்தில் கண்டதில்லை
என்மனம் [illegible] இருப்பேனய்யா இப்பொழுது

நவாப்பு-திபதை.

ராசனே நானுமிப்போ நானென்ன செய்வேனய்யா
மோசமே வந்ததையோ மொழிந்திடேன் கொன்றதல்ல
பாசமாய் ராசன்தன்னைப் பல்லக்கு மீதில்வைத்து
வாசமாய் திருக்குராணிபின் கோட்டைக்கனுப்பிடவே

வசனம்.

அகோ வாருங்கோள் நமதுல்லேனே இராசனைத் தக்கப்பல்லக்கு மீதில்

வைத்து ராணியம்மாள் வாசமாயிருக்கப்பட்ட கோட்டைக் குப்பி
யைப்பாய் தோன்றமல்லனே.

பொது-இயந்தை.

மன்னன் தேசிங்குராசன்னை மல்லனுமெடுத்துத்தூக்கிக்கொண்டு
கன்னியாள் ராணியவளுடன் கதிகலங்கத்தீர்த்து
முன்னமேசொன்னபடி மொழி தவறிடாமலேசென்று நேரேகூட
மன்னனையெடுத்துக்கொண்ட மல்லனும் புலம்பினனே

வசனம்.

தோன்றமல்லனானவன் தேசிங்குராசனைத் தங்கப்பல்லக்கு மீதி
லெடுத்துக்கொண்டு ராணியம்மாளிடம்வர ராணியம்மாளானவள் என்
அரசனுக்குமுன்னமேபட்டதா அல்லது பின்னையா பட்டதா அதை
முன்னதாகச்சொல்லென்று கேட்க இராசனைக்காண்பிக்க மார்பிலத்
திப்படிருக்கிறதைப்பார்த்து ராணியானவள் புலம்புகிறதைக் காண்க

ராணி-புலம்பல்-தரு-இ-ம-அடாணு-தாளம்-ஆதி-கண்ணிகள்.

என்னசெய்வேன் என் கணவா-என் சொல்லைத் தடுத்துப்போனீர்
மன்னவன்கைப்பிடிலே-மாணமூர்ச்சையானீரோ
என் முகத்தைப்பார்த்துவார்த்தை இப்போசொல்வீர் என்கணவா
மன்னவனேயுன்னுடனே-மகிழ்ச்சியாய்நான்வாழ்வதெப்போ
கலியாணஞ்செய்தபோது-கண்டதில்லையுன் முகத்தை
வலிமையாய்க்கைப்பிடிலே-வடிவழகைப்பார்க்கலாச்சே
நிலையாய்ச்சிறையில்வைத்து-அலையவைத்தீர் என்கணவா
உலையில்மெழுகதுபோல்-உருகுதென் முகத்தைப்பாரீர்
பாவிபிரமதேவனே-பார்க்கிலே போவுமோ முறை
ஆவியதுபோகவென்று-அமர்க்களஞ்செய்தக்காலே
சற்றுநேரங்கூடவாழந்து-சற்றுனதைக்கண்டதில்லை
பத்துநாள்கூடவாழ்ந்து-பருவமறியேனே நான்
அங்கம்பதைக்குதையோ-ஆவிமனமாகுதையோ
பொங்கமாய்நாமவாழ்வோமென்று-பூரித்துப்போய்மகிழ்ந்தே
பாவியானபடியினாலே-பார்க்கலையேனிப்பொழுது
ஆவிதுடிக்குதையோ-ஆகாவுசொல்லொணுதே
உன்னைக்காணவிதியிருக்க-உத்தமனேகூடாதையோ
உன்னைவிட்டுநானிருக்கேன்-மன்னவனேகூடவாரேன்

பொது-வசனம்.

அகோதெப்படியென்றால் இவ்விதமாக ராணியம்மாளானவள் பு
லம்பித் தானுடன் கட்டையேறவேண்டுமென்று சகலசடங்குகளும்
செய்து ஸ்ரீரங்கநாதனைத் துதித்துப் பிரார்த்திக்கிற விருத்தங்கள்.



ராணி ஸ்ரீரங்கநாதனைக்குறித்துச் சொல்லுகிற-தரு
இ-ம-பந்துவராளி-தாளம்-திரிபுடை-கண்ணிகள்

என்னநான்செய்குவேனே நான்செய்குவேன் ரங்கநாதா-இப்போ
மன்னவன் என்னைவிட்டுமாணமூர்ச்சையானார் ரங்கநாதா

உன்னைச்சார்வதாகாலயம்மியிருந்தேனே ரங்கநாதா-இப்போ
உன்செயலல்லாமல் ஒருவர்துணையுமில்லை ரங்கநாதா

வந்து இந்தவேளைவரந்தரவேணும் ரங்கநாதா-இப்போ
இந்தவேளைதன்னில் இதோநான்வருகிறேன் ரங்கநாதா

பாதாரவிந்தத்தைப்பணிபுடவிபபோது ரங்கநாதா நீர்
பரமித்துனகைட்குப்பரமபதந்தாரும் ரங்கநாதா

ராணியம்மாள்-உடன்கட்டையேறின-இயந்தை.

சந்தனக்கட்டைகளடுக்கிச் சார்வாய்ராசன்றன்னை
விந்தையாகவைத்து விளக்கவேதீமூட்டி
அந்தரந்தமர்சொல்ல மரிவைமேல்மலர்கள்பெய்யப்
அந்தமிழுதுக்கத்தீயில் தோன்றயும்பாய்ந்திட்டளே

வசனம்.

அகோதெப்படியென்றால் ராணியம்மாள் அரசனைப்பார்த்துப்பு
லம்பிப் பிறகு சாஸ்திரவிதிப்படியே சுக்காசலத்தில் பரிமளதிரவியங்
களைக்கலந்து அரசனுக்கானுமாக அபிஷேகஞ்செய்துகொண்டு சகல
ஆபரணங்களையுஞ் சூட்டி பலேகதானதருமங்களைச்செய்து சந்தனக்
கட்டை மகிழங்கட்டை தேவதாரிக்கட்டை யிது முதலான துகளையடுக்கி
அரசன்பேரின் இராசனைவைத்து அக்கினிமூட்டி ஆகாயத்தில்தேவது
ந்துமிமுழங்கச் சந்தனமழைபொழிய ராணியம்மாளானவள் தீப்பா
ய்ந்து தேசிங்குராசனும் ராணியம்மாளும் வைகுண்டபதவியடைந்தா
ர்கள்.

மங்களம்-இ-ம-அசாவேரி-தாளம்-திரிபுடை.

ஜெயமங்களம் நித்திய சுபமங்களம்

ஸ்ரீரங்கநாதனுக்கும்
சந்திரனைச்சடையில்வைத்த

அறுமுகவேலனுக்கும்
சங்கரனுமையாளுக்கும் (ஜெய)

செஞ்சிப்பதியில்வாழ
தஞ்சமென்றடைந்தவனைத்

ஸ்ரீரங்கநாதனுக்கும்
தங்ககருமிலட்சுமிக்கும் (ஜெய)

தேசமன்னர்கள்போற்றுந்
தேசமுள்ளராணியர்க்கும்

தேசிங்குராசனுக்கும்
தோந்தமோவுத்தனுக்கும் (ஜெய)

மண்டலத்தலர்கட்கும் மறையவர்தங்கட்கும்
வழுத்தும்ஆரணதவர்க்கும் வளருமாதமங்கட்கும் (ஜெய)

தேசிங்குராசனை நேருள்ளநாடகத்னை
மாசில்லாமல்போற்றிய மன்னவன்வீரபத்திரனுக்கும் (ஜெய)

அப்புவியில்நன்று யச்சிட்டதன்னவர்க்கும்
அளித்தபரசுராமனுக்கும் அன்பாய்ப்படிப்பவர்க்கும் (ஜெய)

சம்பிரமதாயிருந்து தயவாய்க்கேட்டவர்க்கும்
நாயகுலத்துடனே தட்சணைதருவோர்க்கும் (ஜெய)

மங்களம்-முற்றிற்று.

---

வாழிபதை.

கார்வாழிகனத்தசெங்கோலிலவும்வாழி
காவலன்தேசிங்குமகாராசன்வாழி
பேர்வாழிபெரியோர்கள்தானும்வாழி
பேசிநெஞ்சாஸ்திரங்களறம்பெருத்தவாழி
ஊர்வாழிபூமியுள்ளோர்தானும்வாழி
யுற்றபரப்பிரமவச்சக்கூடம்வாழி
ஏர்வாழிதேசிங்குநாடகமும்வாழி
யிதைப்பதிப்பித்தபரசுராமமுதலிவாழி

---

# தேசிங்குராஜன்நாடகம்